வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

06.12.2020 ஞாயிற்றுக்கிழமை




# விடிய விடிய கொட்டித் தீர்த்த கனமழை வெள்ள நீரில் மூழ்கியது யாழ். மாநகரம்



யாழ்ப்பாணம், டிசெ. 06

யாழ். மாவட்டத்தில் கொட்டித் தீர்த்த கனமழை யால் குடாநாடு முழுவதும் நேற்று அதிகாலை முடங்கும் நிலைமை ஏற்பட்டது. யாழ்.நகரின் மத்தி யில் இருந்து கிராமங்கள் வரையில் வீதிகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியிருந்தன. 02

# தமிழினத்தை யாராலும் அழித்துவிடவேமுடியாது

## சாணக்கியன் எம்.பி. சபையில் சவால்

கொழும்பு, டிசெம்பர் 06

"இன்னும் எத்தனை வருடங்களானாலும் எமது இனத்தை யாராலும் அழித்துவிட முடியாது."

-இவ்வாறு நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன். 02



## தாழமுக்கம் கரை கடக்கும்வரை வடமாகாணத்தில் மழை நீடிக்கும்

### மக்களே அவதானம்

யாழ்ப்பாணம்,டிசெ.06

வடக்கு மாகாணத்தினூடாக கடந்து சென்ற புரெவி புயலானது வலுக்குறைந்து தீவிர தாழமுக்கமாக மன்னார் வளைகுடாக் கடற்பகுதியில் கடந்த 48 மணி நேரமாக 02

## கொரோனாவை கட்டுப்படுத்த முடியாமல் தவிக்கின்றது அரசு

### முன்னாள் சுகாதார அமைச்சர் விசனம்



கொழும்பு,டிசெ.06

கொரோனா வைரஸ் தொற்றை அரசால் கட்டுப்படுத்த முடியாது போயுள்ளது என முன்னாள் சுகாதார அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனா 02

## மேலும் 501 பேருக்கு கொரோனா உறுதி

கொழும்பு, டிசெ.06


இலங்கையில் மேலும் 501 பேருக்கு நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத் தப்பட்டது.

இவர்களுள் 319 பேர் பேலியகொடை கொத்தணி யைச் சேர்ந்தவர்கள் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அத்துடன் ஏனைய 182 பேரும் சிறைச்சாலை கொத் தணியைச் சேர்ந்தவர்கள் என் றும் அவர் கூறினார். (எ)

## நான்கு வருடங்களுக்குள் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி

### ராஜபக்ஷ 'பெயில்',சஜித் 'பாஸ்' என்கிறார் திலிப் வெதஆராச்சி



கொழும்பு,டிசெ.06

நான்கு வருடங்களுக்குள் ஐக்கிய மக்கள் சக்தி புதிய அரசை அமைக்கும் என அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திலிப் வெதஆராச்சி தெரிவித்தார்.

அம்பலாங்கொடையில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற மக்கள் 02



## எல்.ஆர்.சி. காணிகள் துப்புரவு பளைப் பகுதி மக்கள் எதிர்ப்பு

கிளிநொச்சி, டிசெ.06

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதேசத்திலுள்ள எல். ஆர்.சி. (காணி சீர்திருத்த ஆணைக்குழு) காணிகளை சட்டவிரோதமாக சிலர் பிடித்து துப்புரவு செய்து வருகின்ற மைக்கு பொதுமக்கள் தங்களின் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். 02

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஆளும் தரப்பு எம்.பிக்கள் ஜனாதிபதியை சந்திப்பர்

### நேற்று நீதியமைச்சருடன் முக்கிய பேச்சு



கொழும்பு, டிசெ. 06

நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் தடுத்துவைக் கப்பட்டுள்ள 97 தமிழ் அரசியல் கைதிகளை விடு விப்பது தொடர்பில் ஜனாதிபதி தலைமை யில் சட்டமா அதிபரையும் அழைத்து அரசு தரப்பு சிறுபான்மை பாராளுமன்ற உறுப் 02

## ஒரே குடும்பத்தில் மூவருக்கு பருத்தித்துறையில் தொற்று

யாழ்ப்பாணம், டிசெ.06

பருத்தித்துறைப் பிரதேசத் தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்திய சாலை ஆய்வுகூடத்தில் நேற்று 315 பேருக்கு கொரோனா வைரஸ் (பி.சி.ஆர்.) தொற்றுப் பரிசோதனை 02

## தமிழினத்தை....

பிரபாகரனின் புகைப்படத்தை பிர சுரித்தவர்களை பொலிஸார் கைதுசெய் வது என்பது அரசின் இயலாமையை மூடிமறைக்கும் செயலாகும். இவர்களைக் கைது செய்வதற்கு பதிலாக போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் நபர் களைக் கைது செய்து சிறையிலடையுங் கள் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத் தில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு: 'நான் தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்றம் வந்ததாகச் சிலர் இங்கு கூறுகின்றனர்.

நான் தேர்தலில் போட்டியிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் மட்டக் களப்பில் அதிக விருப்புவாக்குகளைப் பெற்றுக்கொண்டே இந்தப் பாராளுமன் றம் வந்துள்ளேன் என்பதை இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

மட்டக்களப்பில் இளைஞர்கள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த 26, 27, 28ஆம் திகதிகளில் முகப்புத்தகத்தில் சில பதிவுகளை இட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

29 வயது அரச ஊழியர் ஒருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். முகப்புத்தகத்தில் சில பதிவுகள் இடப் பட்டுள்ளதாம். இதன் காரணமாகவே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பின் தலை வர் வே.பிரபாகரனின் புகைப்படத்தை முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளதாக இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதுவும் பயங்கரவாதத் தடைச்சட் டத்தின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர். இவ்வாறு கைது செய்துள்ள அரசாங்கம் அவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது.

முகப்புத்தகத்தில் புலிகளின் தலைவர் பிரபாகரனின் புகைப்படத்தை பிரசுரித்த வர்களை பொலிஸார் கைதுசெய்வது என்பது அரசாங்கத்தின் இயலாமையை மூடிமறைக்கும் செயலாகும்.

இவர்களைக் கைது செய்வதற்கு பதி லாக போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் நபர்களைக் கைது செய்து சிறையிலடையுங்கள்.

அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுக் களை வைக்க வேண்டும் என்பதல்ல எனது நோக்கம். நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் இருக்கின்றது என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அதேபோன்று அரசாங்கம் ஏனைய விடயங்களை மறைப்பதற்காக இவ்வாறு அப்பாவி இளைஞர்களைக் கைது செய்வதை நிறுத்த வேண்டும்.

## நான்கு வருடங்....

சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

தற்போதைய நிலைப்பாட்டின்படி ராஜ பக்ஷ பெயிலாகியுள்ளார். ஆனால் சஜித் பாஸாகியுள்ளார். இந்த நாட்டில் தற்போது முழுமையாக ஏகாதிபத்திய ஆட்சி முறை மையே காணப்படுகின்றது. ஆகவே, ராஜபக்ஷக்களுக்கு வாக்களித்த மக்களுக்கு அவர்கள் மீது வெறுப்பு ஏற்பட்டுள்ளது.

அந்தளவுக்கு நாட்டு மக்களை குறு கிய காலத்துக்குள் வெறுக்கும்படி செய்த அரசு எப்போதும் நாட்டில் இருந்த தில்லை. சூரியனின் விடியலுக்காக மனப் பூர்வமாக நம்பிக்கையுடன் காத்திருக்கின் றோம். அதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. நான்கு வரு டங்களுக்குள் ஐக்கிய மக்கள் சக்தி புதிய ஆட்சியை அமைக்கும்- என்றார். (அ-எ)

## எல்.ஆர்.சி....

நேற்று பேராலை எனும் இடத்தி லுள்ள எல்.ஆர்.சி.காணிகளை துப்புரவு செய்யும் பணிகளை அவதானித்த பொது மக்கள் 50 இற்கும் மேற்பட்டோர் ஒன்று சேர்ந்து தங்களின் கடும் எதிர்ப்பை வெளிப் படுத்தினர்.அத்தோடு பொலிஸாரின் கவனத்துக்கும் கொண்டு சென்ற நிலை யில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்து துப்புரவுப் பணிகளை நிறுத்தினர்.

பளை பிரதேசத்தில் பல பொதுமக் கள் இன்றும் குடியிருக்க காணியற்று இருக்கின்றனர். பலர் விவசாயம் செய்ய போதுமான நிலமின்றி காணப்படுகின்ற னர். இந்நிலையில் இங்கு எமது கண் முன் உள்ள எல்.ஆர்.சி. காணிகளை இந்த மாவட்டத்துக்கு வெளியிலிருந்து வந்த சிலர் தங்களின் உயர்மட்ட செல்வாக் கைப் பயன்படுத்தி 50 ஏக்கர், 100 ஏக்கர் எனப் பிடித்து துப்புரவு செய்கின்றனர். ஆனால் காணியற்ற நாம் குறைந்தது அரை ஏக்கர் காணியையாவது எங்களுக் குத் தாருங்கள் என்றே கோருகின்றோம். ஆனால் வறிய இந்த பிரதேசத்தை மக் களுக்கு வழங்காது வெளியிடங்களைச் சேர்ந்த வசதி படைத்தவர்களுக்கு வழங்குவது கவலைக்குரிய விடயம் எனத் தெரிவித்த பொது

மக்களும், மக்கள் அமைப்பின் பிரதி நிதிகளும் இந்தச் செயல்பாட்டை உடனடி யாக நிறுத்தி இந்தப் பிரதேச மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுக்க வேண் டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வர னைத் தொடர்பு கொண்டு வினவிய போது-

எல்.ஆர்.சி. காணிகள் எமது கட் டுப்பாட்டுக்குள் இல்லாததால் எம்மால் உடனடியாக எவ்வித தீர்மானத்துக்கும் செல்ல முடியாதுள்ளது. இருப்பினும் எல்.ஆர்.சி. ஆணைக்குழுவின் தலை வரிடம் இதுதொடர்பில் தெரியப்படுத் தியிருக்கின்றேன்.

உரிய முறைப்படி, நியாயமாக காணி கள் பகிர்ந்தளிப்படவில்லை என்றால் இங்கு குழப்ப நிலை ஏற்படும் எனவும், எனவே உரிய முறைப்படி காணிகள் பகிர்ந்தளிக்கப்படும் வரை தற்போது இடம்பெறும் செயல்பாடுகளை நிறுத்த தெரியப்படுத்தியிருக்கின்றேன். இது தொடர்பில் எழுத்து மூலம் கோரியிரு கின்றார். அதனை நாம் விரைவில் வழங்கு வோம். அத்தோடு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சருக்கும் தற்போது இடம்பெறும் காணிகள் துப்புரவு செய்யும் பணிகளை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கூறி யிருக்கின்றேன்- என்றார். (அ-எ-52)

## ஒரே குடும்பத்தில்....

மேற்கொள்ளப்பட்டது. பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள தனது வீட்டுக்குக் கொழும்பிலிருந்து திரும்பிய நிலையில் கடந்த 3 ஆம் திகதி ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட் டது. இந்நிலையில் அவரது குடும்ப உறுப்பினர்கள் மூவருக்கே நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டது. (அ-எ)

## கொரோனாவை....

ரத்ன தெரிவித்தார்.

மஹர சிறைச்சாலைக் கைதிகள் போதை மாத்திரைகளைப் பயன்படுத்தினர் எனக் கூறப்படும் குற்றச்சாட்டு ஆதாரமற்றது எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத் தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

எதிர்காலத்தில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளா னவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என வெளிநாடுகள் சுட்டிக்காட் டியுள்ளன. அதேபோன்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், நாடு ஒரு கொரோனா பிராந்தியமாக மாறியுள்ளது எனக் கூறியுள்ளார். இந்நிலையில் அரசு நாட்டு மக்களுக்கு இன்னமும் நிவாரணம் வழங்கவில்லை.

அதேபோன்று கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த இந்த அரசு நிதி எதனையும் ஒதுக்கவில்லை. வெளி நாடுகளில் தொழில்புரியும் இலங்கைப் பிரஜைகள் நாட்டுக்கு வரமுடியாத நிலையில் அசௌகரியத்தை எதிர் கொண்டுள்ளனர். அவர்களை நாட்டுக்கு அழைத்துவருவதற்கு இந்த அரசிடம் முறையான திட்டமிடலில்லை. ஏனைய நாடுகள் அவர்களின் நாட்டுப் பிரஜை களை உடனடியாக தமது நாடுகளுக்கு அழைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன. - என்றார். (அ-எ)

கார்த்திகை விளக்கீடு என்பது ஒரு பண் டிகை. இப்படியான பண்டிகை நாளில் பொலிஸார் கார்த்திகை விளக்கேற்ற தடை ஏற்படுத்தியுள்ளனர். இதனை ஒருபோதும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஒருசில இடங்களில் மக்கள் விளக்கை ஏற்றுவதற்காக சிறிய அலங்காரங்களைச் செய்திருந்தனர். இதனையும் பொலிஸார் எட்டி உதைத்துள்ளனர்.

நீங்கள் உண்மையான பௌத்தர் என் றால் மனிதத்துவதுக்கு மரியாதை செலுத்த முதலில் பழகிக்கொள்ளுங்கள். உண்மையிலேயே இந்த நாட்டிலுள்ள சிங்கள மக்கள் பாவம். பாராளுமன்றத் தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உரையாற்றியபோது, சரத் வீரசேகர உள்ளிட்டவர்கள் எதிர்ப்பு வெளியிட்ட னர். கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக் களித்தமை காரணமாகவே இவ்வாறு எதிர்ப்பை வெளியிட முடிந்ததாகக்கூறி மக்களை ஏமாற்றுகின்றனர். இவ்வாறு செய்து கொண்டு நீங்களே நாட்டில் பிரச்னைகளை உருவாக்குகின்றீர்கள். - என்றார். (அ-எ)

## தமிழ் அரசியல்....

பினர்களுடன் விரைவில் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்வதாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

பொதுமன்னிப்பு வழங்கவேண்டிய வர்கள், வழக்கு விசாரணைகளைத் துரித் தப்படுத்தவேண்டியவர்கள் என வகைப் படுத்தி மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது தொடர்பில் உரிய பணிப்பை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கு வார் என்றும் நீதி அமைச்சர் உறுதியளித் துள்ளார்.

அரசியல் கைதிகளின் விவகாரம் தொடர்பில் ஆளும் கட்சியில் உள்ள தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர் களை நேற்று சனிக்கிழமை நாடாளுமன் றில் நீதி அமைச்சர் சந்தித்தார்.

இதில் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன், இராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், மருதபாண்டி இராமேஸ்வரன் ஆகியோர் பங்கேற்றனர். அமைச்சர் டக் ளஸ் தேவானந்தா உள்ளிட்ட ஏனைய ஆளும் தரப்பு தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர்க்க முடியாத காரணத் தால் நேற்றைய சந்திப்பில் பங்கேற்க முடிய வில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் மனு ஒன்று நீதி அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டது.

அத்துடன், நாட்டிலுள்ள சிறைச்சாலை களில் மகஸின் சிறைச்சாலையில் 36 தமிழ் அரசியல் கைதிகள் வழக்கு விசார ணைகள் நிறைவடையாத நிலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அந்தச் சிறையில் தண்டனை வழங்கப்பட்ட 9 கைதிகளும் மேன்முறையீடு செய்யப்பட்ட நிலையில் 9 கைதிகளுமாக 54 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்துவைக்கப்பட் டுள்ளனர்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் 13 தமிழ் அரசியல் கைதிகள் வழக்கு விசாரணை கள் நிறைவடையாத நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அந்தச் சிறையில் தண்டனை வழங்கப்பட்ட 19 கைதிகளும் உள்ளனர். அங்கு 32 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலை மற்றும் மகர சிறைச்சாலையில் தலா 2 பேரும் மொனராகலை, களுத்துறை, நீர்கொழும்பில் தலா ஒருவருவரும் என மொத்தம் 97 தமிழ் அரசில் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 31 தண்டனைக் கைதிகளுக்கு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் ஊடாகவே விடுதலை செய்ய முடியும் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த நிலையில் 97 தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் சட்டமா அதி பரையும் அழைத்து அரசு தரப்பு தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் விரைவில் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்வதாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

வழக்கு விசாரணைகள் முடிவுறுத்தப் படாது உள்ள கைதிகளை பிணையில் விடுவிப்பது தொடர்பில் சட்டமா அதிபரு டன் பேசி பயங்கரவாத தடைச் சட்டத் தில் திருத்தத்தைக் கொண்டுவருவதற்கு முயற்சிப்பதாகவும் நீதி அமைச்சர் உறுதி யளித்துள்ளார்.

மேலும் நாட்டில் புதிதாகக் கொண்டு வரப்படவுள்ள அரசமைப்பு வரைவில் ஆளும் தரப்பில் உள்ள தமிழ்ப் பாராளு மன்ற உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து முன்மொழிவுகளை முன்வைக்கு மாறும் நீதி அமைச்சர் அலி சப்ரி கேட் டுக்கொண்டார். (அ)

## விடிய விடிய....

யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளில் இடைவிடாமல் கனமழை கொட்டியது.

இதனால் தாழ்நிலப் பகுதி மக்கள் பாதிக்கப்பட்டனர். பல பகுதிகளில் குடியிருப்புகளை தண்ணீர் சூழ்ந்ததால் பொதுமக்கள் வெளியேற முடியாமல் சிரமத்திற்குள்ளாகினர்.

அதிகாலை 2 மணிக்கு ஆரம்பித்த அடை மழை காரணமாக மாவட்டம் முழுவதும் வெள்ளம் தேங்கியதோடு நீண்ட காலமாக நீர் தேங்காத பகுதிகளி லும் அதிக நீர் புகுந்துகொண்டது. இத னால் பல ஆயிரம் குடும்பங்கள் அதி காலை 3 மணியில் இருந்தே நித்திரை இன்றி நீரில் கால் கடுக்கக் காத்திருந்தனர்

அதிக மழை காரணமாக மாவட்டம் முழுமையாக ஈரத்தன்மை காணப்படு கின்றது. வீட்டு வளவுகளில் அதிக நீர் தேங்கி நிற்பதாலும் குளிரின் காரணமாக வும் காய்ச்சல், தடிமல், இருமல் போன்ற நோய்த் தொற்றும் அபாயமும் நுளம்பு பெருகும் சூழலும் ஏற்பட்டுள்ளது.

பல இடங்களில் இன்னும் வெள்ள நீர் வழிந்தோடமுடியாதவாறு தேங்கியுள்ளது.

வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தமை யால் மக்கள் உறவினர் வீடுகளுக்கும் வேறு பாதுகாப்பான இடங்களுக்கும் இடம்பெயர்ந்தனர்.

யாழ். நகரப்பகுதியில் யாழ்.பஸ் நிலையம், ஸ்ரான்லி வீதி, கோயில் வீதி, நல்லூர்-பருத்தித்துறை வீதி, கந்தர்மடம் என்பன முற்றாக வெள்ள நீரில் மூழ்கிக் காணப்பட்டன. (மேலும் படங்கள் 5ஆம் பக்கத்தில்) (அ-எ-03)

## தாழமுக்கம்....

ஒரே இடத்திலேயே நிலைகொண்டுள்ளது என புவியியல்துறை ஆய்வாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது அடுத்த 16 மணி நேரத்துக்கும் அதே இடத்திலேயே நிலைத்திருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இந்த தாழமுக்கம் கரையைக் கடக்கும் வரை வடக்கு மாகாணத்தில் மழை பெய் யும். குறிப்பாக யாழ்ப்பாண மாவட்ட மும் (தீவுப்பகுதிகள் உட்பட) மன்னார் மாவட்டமும் கனமழைக்கான வாய்ப்புக் களை கொண்டிருக்கின்றன. இன்று அதிகாலையும் யாழ். மாவட்டத்தில் கனமழைக்கு வாய்ப்புண்டு. சிலவேளை அதற்கு முன்பாக இத்தாழமுக்கம் கரை யைக் கடந்தால் வடக்கில் படிப்படியாக மழை குறையும். ஆனாலும் தற்போதைய நிலையின் படி தாழமுக்கம் அதே இடத் தில் தொடரவே வாய்ப்புண்டு. ஏற்கெனவே மண், நீர் நிரம்பிய நிலையில் காணப்படு வதால் 50 மி.மீ. மழை கிடைத்தாலே வெள்ள அனர்த்தம் ஏற்பட வாய்ப்புண்டு.

எனவே, மக்கள் தொடர்ந்து அவ தானமாக இருப்பது அவசியம்- என்றார். (அ-எ-03)

## கர்தினால்...

(03ஆம் பக்க தொடர்ச்சி)

எனவே, வடக்கு-கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்தநிலையில் கொழும்பில் இடம் பெற்ற மிகமோசமான ஈஸ்டர் குண்டுத்தாக் குதல் தொடர்பாக எவ்வித ஆரோக்கியமான விசாரணைகளும் முன்னெடுக்கப்படாது இருப்பது கவலைக்குரியதாகவே இருக்கின் றது.

வடக்கு-கிழக்கு உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்த நிலையில், ஒரு சமாதான சகவாழ்வுடன்கூடிய நல்லிணக்கத்தையே இலங்கை இன்று எதிர்பார்த்து நிற்கின் றது. இருந்தபோதிலும், இந்த எதிர்பார்ப் பிற்கு குந்தகம் விளைவிப்பதாக 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்த வெளிப்பாடுகள் இருந்துவிடக்கூடா தென்பதே நாட்டு மக்களின் பிரார்த்த னையாக இருக்கின்றது.

ஈழநாடு
Eelanadu
06.12.2020 ஞாயிற்றுக்கிழமை
சார்வாரி, கார்த்திகை 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# வெட்கப்பட வேண்டிய அரசியல் தலைவர்கள்

ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு தமிழ் மக்கள் வாக்களித்ததை நினைத்து தான் வேதனையடைவதாகவும், பொன்சேகா ஜனாதிபதியாகியிருந்தால் தமிழ் மக்கள் என்ன பாடுபட்டிருப்பார்கள் என்றும் டெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார். பொன்சேகாவிற்கு வாக்களிக்குமாறு மக்களை கேட்டவர்கள் யார்?

பொன்சேகா, விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தின்போது இராணுவத் தளபதியாக இருந்தவர். இறுதி யுத்தத்தின்போது போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் இடம்பெற்றிருப்பது உண்மையாயின், அதற்கு பொறுப்புச் சொல்லவேண்டிய முதன்மையானவர்களில் பொன்சேகாவும் ஒருவர். ஏனெனில், பொன்சேகாவின் வழிகாட்டலில்தான் இராணுவம் இயங்கியது. இராணுவம் வழிதவறிச் சென்றிருந்தால் அதனை கட்டுப்படுத்தவேண்டிய முதன்மையான பொறுப்பு பொன்சேகாவிடம்தான் இருந்தது. ஏனெனில், அப்போது பாதுகாப்புச் செயலராக இருந்த தற்போதைய ஜனாதிபதி யுத்த முனையில் இருந்தவரல்லர். யுத்த முனையில் நடைபெற்ற விடயங்களுக்கு பாதுகாப்புச் செயலரைவிடவும் இராணுவத் தளபதியே அதிகம் பொறுப்பானவர். இவ்வாறான ஒருவர் 2010 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது, அவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்தது. அவருக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களைக் கோரியது. கூட்டமைப்பு தங்களுக்கு தவறு செய்யாது என்னும் நம்பிக்கையிலிருந்த தமிழ் மக்களும் கண்ணை மூடிக்கொண்டு, விடுதலைப் புலிகளை பூண்டோடு அழிக்கும் யுத்தத்தை வழிநடத்திய இராணுவத்தளபதி பொன்சேகாவிற்கு வாக்களித்தனர்.

உண்மையில், பொன்சேகாவை ஆதரிக்கும் கூட்டமைப்பின் முடிவு அரசியல்ரீதியில் மிகவும் தவறானது. ஒருபுறம், போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்கான சர்வதேச விசாரணை வேண்டும் வடக்கு கிழக்கில் இராணுவ மயப்படுத்தலை நீக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு, ஓர் இராணுவத் தளபதிக்கு வாக்களிக்குமாறு கூறியதனாது, தமிழ் மக்களின் நீதிக்கான அரசியல் பயணத்தை பலவீனப்படுத்தியது. தமிழ் மக்கள் சரத் பொன்சேகாவிற்கு வாக்களித்தன்மூலம், போர்க் குற்றங்கள் மற்றும் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்டதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கேள்வி கேட்கும் அவர்களின் தார்மீக உரிமையும் கேலிக்குள்ளாக்கப்பட்டது. இன்று, ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை பதவிக்கு அமர்த்துவது தொடர்பில் சிலர் கருத்துக்களை முன்வைக்கின்றனர். ஆனால், ஓர் இராணுவ தளபதியை இந்த நாட்டிற்கு ஜனாதிபதியாக்குவதற்கு ஒத்துழைத்த கூட்டமைப்பினரால் எவ்வாறு இதனை விமர்சிக்க முடியுமென்று ஒருவர் கேள்வி எழுப்பினால், கூட்டமைப்பின் நிலைமை மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழரின் தலையும் நிமிர முடியாது.

இன்று பொன்சேகா, பொன்சேகாவாக நடந்துகொள்ளும்போது, தமிழ் மக்கள் அவருக்கு வாக்களித்ததை எண்ணி வேதனையடைய ஒன்றுமில்லை. ஆனால், வெட்கப்படவேண்டியது அவசியம். பொன்சேகாவை ஆதரிக்கும் முடிவை கூட்டமைப்பு எடுத்தபோது அதனை ஆதரித்துநின்ற செல்வம் அடைக்கலநாதன், தனது செயலுக்காக வெட்கப்படவேண்டும். அப்போது கூட்டமைப்பின் முக்கியஸ்தராக இருந்த சுரேஸ் பிரேமச்சந்திரன் தனது முடிவையெண்ணி வெட்கப்படவேண்டும். அறிக்கை அரசியல் செய்துகொண்டிருக்கும் மாவை சேனாதிராசா வெட்கப்பட வேண்டும். முக்கியமாக, சம்பந்தன் வெட்கித் தலைகுனியவேண்டும். வெட்கப்படுவதற்கு அப்பால், தாங்கள் தமிழ் மக்களை தவறாக வழிநடத்தியதற்காக தமிழ் மக்களிடம் இவர்கள் ஒவ்வொருவரும் மன்னிப்பு கோரவேண்டும். எனவே, பொன்சேகாவிற்கு தமிழ் மக்கள் வாக்களித்தற்காக கூட்டமைப்பின் அரசியல்வாதிகள் எவரும் வேதனைப்பட வேண்டியதில்லை. உண்மையில், கூட்டமைப்பின் தலைவர்களை நம்பி பொன்சேகாவிற்கு வாக்களித்துவிட்டோமே என்பதை எண்ணி தமிழ் மக்கள்தான் வேதனைப்படவேண்டும்.

# கர்தினால் அதிவண. மல்கம் ரஞ்சித்தின் கவலை!

- அலசுவது இராஜதந்திரி -



இலங்கையின் கத்தோலிக்க மத தலைவரான கர்தினால் அதிவண. மல்கம் ரஞ்சித் ஆண்டகை 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பாக இன்றுவரை இருந்துவரும் தொய்வு நிலை குறித்தும், அத்தாக்குதல் சம்பந்தமாக இது வரை எவரும் கைதுசெய்யப்படாது இருப்பது குறித்தும் தமது கவலையை வெளியிட்டுள் ளார். 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் குண்டு தற் கொலைத் தாக்குதல்கள் கொழும்பு பரிசுத்த அந்தோனியார் ஆலயத்திலும் நீர்கொழும்பிலுள்ள தேவாலயத்திலும் மட்டக்களப்பி லுள்ள தேவாலயம் ஒன்றிலும் ஒரே நாளில் இடம்பெற்றிருந்தன.

இம் மிலேச்சத்தனமான தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் சிறுவர்கள் உட்பட 270 பேர் கொல்லப்பட்டிருந்தனர். முழுநாட்டையுமே கதிகலங்கவைப்பதாக இந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் கொழும்பு, நீர் கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய பிர தேசங்களில் இடம்பெற்றிருந்தன.

இத்தாக்குதல் இடம்பெற்ற சமயத்தில் அதிவணக்கத்துக்குரிய கர்த்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை நடந்துகொண்ட விதம் அவரது தெய்வீக பண்புகளை எடுத்தியம்புவதாக அமைந்திருந்தது.

இத் தாக்குதல்களின் பிரதிபலிப்பாக முஸ்லிம் மக்கள் எவரும் பாதிக்கப்படக் கூடாது என்பதில் அதிவண மல்கம் ரஞ்சித ஆண்டகை குறிப்பாக இருந்ததோடு, எந்தவொரு வடிவத்திலும் இன, மத பூசல்களுக்கு இடம்தராதவகையில் அவர் நடந்து கொண்டிருந்தார்.

## மிக மோசமான தாக்குதல்

இருந்தபோதிலும், மிக மோசமான முறையில் இடம்பெற்ற இந்த ஈஸ்டர் குண்டு தாக்குதல் தொடர்பில் இதுவரை எந்தவொரு நபரும் கைதுசெய்யப்படாது இருப்பதும், பாதிக்கப்பட்டோருக்கு உரிய நிவாரணங்கள் வழங்கப்படாது இருப்பது குறித்தும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தமது கவலையை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தனவை நேற்று முன்தினம் சந்தித்தபோது வெளியிட்டிருந்தார்.

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்பதாக புலனாய்வுத் தகவலகள்கூட இந்த அனர்த்தம் தொடர்பாக இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு கிடைத்திருந்தன. ஆனால், தகவல்களையும் உதாசீனம்செய்த நிலையிலேயே கொழும்பு கொச்சிக்கடை தேவாலயத்திலும் நீர் கொழும்பு தேவாலயத்திலும் மட்டக்களப்பிலுள்ள தேவாலயத்திலும் குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்று, மொத்தம் 270பேர்வரை கொல்லப்பட்டிருந்தனர்.

குண்டு வெடிப்புகளும், உயிர், உடைமைச் சேதங்களும் தலைநகர் கொழும்பைப் பொறுத்தவரை புதிதான விடயங்களல்ல. வடக்கு - கிழக்கு யுத்தம் முறுக்கேறியிருந்த காலகட்டங்களில் தலைநகர் கொழும்பில் மத்தியவங்கிக் கட்டிடம் உட்பட பல்வேறு இடங்களிலும் குண்டுவெடிப்புகள் இடம்பெற்று உயிர், உடைமைச் சேதங்கள் பாரியளவில் ஏற்பட்டிருந்தன.

## அதிவண மல்கம் ரஞ்சித்

ஆனால், வடக்கு-கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்தபின்னர் தலைநகர் கொழும்பில் ஏற்பட்ட பாரிய தாக்குதலாகவே ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல் விளங்கியிருந்தது. கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, வத்திக்கானில் புனித பாப்பரசர் தெரிவிக்கும் உட்பட்டிருந்தவரென்பது குறிப்பிடத்தக்கது. எனவே, இந்த நாட்டின் கத்தோலிக்க மக்கள் அனைவரும் பக்திபூர்வமாக வழிபடும் ஒருவராகவே அதிவண ஆண்டகை மல்கம் ரஞ்சித் விளங்குகின்றார்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் இடம்பெற்று இதுவரை ஒருவருடம் கழிந்துள்ளபோதிலும், இத்தாக்குதல்களுக்கு பொறுப்பானவர்கள் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. இந்நிலையில், கத்தோலிக்க பேராயர் தெரிவித்துள்ள கவலை நியாயமானதாகவே இருக்கின்றது.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் அன்றைய பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் இக்குண்டுவெடிப்பு தொடர்பாக கைதுசெய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்களைப் போன்றே இன்னும் பலர் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். ஆனால், இதுவரை எந்தவிதமான முன்னேற்றங்களும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பாக சரியான குற்றவாளிகளை கண்டுபிடிப்பதில் ஏற்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில், மல்கம் ரஞ்சித் ஆண்டகை வெளியிட்டுள்ள கவலை நியாயமானதாகவும், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக நீதி வேண்டி நிற்கும் மக்களுக்கு மன ஆறுதலை ஓரளவாவது தருவதாகவும் இருக்கின்றது.

இலங்கை இன்று புதிய ஆட்சியாளர்களால் ஆளப்படுகின்றது. கடந்த ஆட்சியாளர்கள் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக ஓர் அசமந்தப்போக்கையே கையாண்டிருந்தனர்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை; மந்தகதியில் செயற்படும் அரசு

## எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டு



கொழும்பு,டிசெ.06

**ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணையில் அரசு மந்தகதியில் செயற்படுவதாக எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெர்ணான்டோ தெரிவித்தார்.**

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற குழுநிலை விவாதத்தின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் சுற்றுலாத்துறை தற்போது வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு கொரோனா மட்டுமன்றி, ஈஸ்டர் தாக்குதலும் பிரதானக் காரணமாக இருக்கின்றது.

இதனை ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக தற்போது அரசு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

எனினும், கொழும்பு பேராயர் கர்தினல் மல்கம் ரஞ்ஜித் ஆண்டகை, இந்த விசாரணை தொடர்பாக கவலை வெளியிட்டிருந்தார். இதனை அரசு மூடி மறைத்துவிடக்கூடாது என்று வலியுறுத்தியிருந்தார்.

ஈஸ்டர்தாக்குதல்பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என வலியுறுத்தியே இந்த அரசை மக்கள் ஆட்சிக்கு அமர்த்தினார்கள்.

எனினும், தேர்தல் காலத்தின் போது கூறிய வேகத்தைவிட அரசாங்கம் தற்போது குறைவாகவே செல்கிறது என்பதே மக்களின் பொதுவான நிலைப்பாடாக இருக்கிறது.

அரசியல் அழுத்தங்கள் இன்றி இந்த விசாரணைகள் இடம்பெற வேண்டும் என்பதுதான் பேராயர் உள்ளிட்ட அனைவரதும் கோரிக்கையாகும்.

இதனை நாம் அரசியலாக கருதவில்லை. இதனை வைத்து எவரும் அரசியல் செய்யவும் முற்படக்கூடாது. எனினும், யார் இந்தக் குண்டுத் தாக்குதலின் பின்னணி என்ற உண்மை தெரிய வேண்டும். இது ஒன்றுதான் எமது நோக்கமாகும்-என்றார்.



## ஐ.தே.க. பதில் பொதுச்செயலராக பிரசன்ன சமல்

கொழும்பு, டிசெ. 06

ஐக்கிய தேசிய கட்சியின் பதில் பொதுச் செயலாளராக தான் தெரிவாகியுள்ளார் என வடமேல் மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் பிரசன்ன சமல் செனரத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் அகில விராஜ் காரியவாசம் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவில் இருந்து இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நியமனம் 2020 டிசெம்பர் 31 வரை அமுலில் இருக்கும் என்றும் பிரசன்ன சமல் செனரத் தெரிவித்துள்ளார்.




**மேடம்**
அதிர்ஷ்டமான நாள். எண்ணங்களுக்கு மதிப்பளிப்பீர்கள். மகிழ்ச்சி அதிகமாகும். சுபநிகழ்ச்சியில் பங்கேற்பீர்கள். விமர்சங்களை தவிருங்கள்.

**இடபம்**
புதிய விஷயங்களில் ஈடுபடும், கவனமும் தேவை. பணிகளில் கவனத்துடன் இருங்கள். முயற்சியால் பலன் உண்டு. காத்திருந்த நல்ல செய்தி வரும்.

**மிதுனம்**
எதிர்பார்க்கும் மாற்றம் தேடிவரும். குடும்பத்தில் நிம்மதி பிறக்கும். உறவினர் தேடி வரக்கூடும். நன்மை தரும் மாற்றங்கள் உருவாகும்.

**கடகம்**
நண்பர்களுக்கு உதவி செய்வீர்கள். நன்மைகள் உண்டு. தொழிலை விரிவுபடுத்துவதைக் கொஞ்சம் ஒத்தி வையுங்கள். மன நிம்மதி ஏற்படும்.

**சிங்கம்**
எதிர்ப்பு நீங்கும். உற்சாகமான நாள். நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் விற்பனையும், லாபமும் சீராக இருக்கும்.

**கன்னி**
குடும்பத்தில் மகிழ்ச்சி. சுறுசுறுப்பாகச் செயல்படுவீர்கள். மரியாதை கிடைக்கும். குடும்பத்துடன் தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.

**துலாம்**
உறவினரின் ஒத்துழைப்பு இருக்கும். பிள்ளைகளால் சங்கடங்கள் ஏற்பட்டு இன்றே நீங்கும். பெண்கள் குடும்பத்தினருடன் அனுசரித்துச் செல்வீர்கள்.

**விருட்சிகம்**
சுற்றியிருப்பவர்களுடன் விவாதத்தைத் தவிர்க்கவும். சக பணியாளர்களால் சில பிரச்னைகள் ஏற்படும். லாபங்கள் முன்பைவிட நன்றாயிருக்கும்.

**தனுசு**
திடீர் நட்பு உருவாகலாம். வேலைப்பளு அதிகரிக்கும். புதிய முயற்சிகளைதவிருங்கள். எதிலும் பொறுமையைக் கடைப் பிடிக்கவேண்டிய நாள்.

**மகரம்**
மனதில் தேவையற்ற கற்பனை பயங்கள் ஏற்படும். குடும்பத்தில் சிறு சங்கடம் உண்டு. பாதிப்பு இருக்காது. பணியாளர்களுக்கு உயரதிகாரி தருவார்.

**கும்பம்**
பணத்தை கவனமாக கையாளுவதால் பிரச்னைகள் இருக்காது. கவலைகள் முடிவுக்கு வரும். குழந்தைகளால் மகிழ்ச்சி ஏற்படும்.

**மீனம்**
பொருள்களை கவனமாகப் பார்த்துக்கொள்ளவும். வெளியில் செல்லும்போது சாலையில் கவனம் தேவை. தாழ்வு மனப்பான்மை நீங்கும்.

## 5 கைக்குண்டுகள் மீட்பு

திருமலை, டிசெ. 06

திருகோணமலை- சேருவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீலபொல காட்டுப் பகுதியில், ஐந்து கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட கைக்குண்டுகளை, திருகோணமலை சர்தாபுர விசேட பொலிஸ் அதிரடிப் படையினர் செயலிழக்கச் செய்துள்ளனர்.

குறித்த கைக்குண்டுகள் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட எஸ்.எப்.87 வர்க்கத்தை சேர்ந்தவை என தெரிவித்த சேருவில பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



## கண்டியில் நேற்றும் சிறிய நில அதிர்வு

கொழும்பு, டிசெ. 06

கண்டி திகண பகுதிக்கு அருகில் நேற்றும் சிறிய அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று காலை 5.41 மணியளவில் திகண அளுத்வத்த பகுதியில் இவ்வாறு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரிக்டர் அளவில் இரண்டுக்கும் குறைவானளவு அதிர்வு பதிவாகியுள்ளது. திகண பகுதிக்கு அருகில் கடந்த மாதத்தில் மாத்திரம் 6 முறை இவ்வாறு சிறிய அளவில் நிலநடுக்கம் பதிவாகி யுள்ளது.

இது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்ற போதிலும் இதற்கான காரணம் இதுவரை இனங்காணப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.




## பாராளுமன்றில் கார்த்திகை பூ; பிரிட்டன் தூதரகம் விளக்கம்

கொழும்பு, டிசெ.06

தமிழர்களின் உரிமைக்கான விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களை நினைவேந்தும் தினத்தன்று (நவம்பர் 27) பிரிட்டன் பாராளுமன்றத்தின் முன்பகுதியில் கார்த்திகைப் பூ ஒளிரச் செய்யப்பட்டமை பொலிஸாருடன் தொடர்புபட்ட விடயமாகும் என்று இலங்கைக்கான பிரிட்டன் தூதரகம் தெரிவித்துள்ளது.

பிரிட்டனில் நடைபெற்ற மாவீரர் தின நினைவேந்தலின்போது, பிரிட்டன் பாராளுமன்றத்தின் முன்பகுதியில் கார்த்திகைப் பூ ஒளிரச் செய்யப்பட்டமை குறித்து கொழும்பு ஊடகமொன்று கேள்வி எழுப்பியுள்ளது.

அந்த ஊடகத்தின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே பிரிட்டன் தூதரகம் மேற்கண்டவாறு கூறியுள்ளது.

பிரிட்டனில் தடை செய்யப்பட்ட அமைப்புகளின் பேரணிகள் உட்பட அனைத்து விடயங்களையும் கையாள்வது பொலிஸ்துறையோடு தொடர்புபட்ட விடயம் எனப் பிரிட்டன் தூதரகம் விளக்கமளித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக பிரிட்டன் தூதரகம் ஒரு வரியில் பதிலளித்துள்ளது எனவும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

## பட்டப்பகலில் வீடுகளுக்குள் புகுந்து திருட்டில் ஈடுபடும் இருவர் சிக்கினர்

யாழ்ப்பாணம், டிசெ. 06

கோப்பாய் மற்றும் யாழ்ப்பாணத்தில் பட்டப்பகலில் வீடுபுகுந்து திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்களிடமிருந்து திருட்டு நகைகள் 7 பவுண் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

“வீடுகளில் உள்ளவர்கள் வெளியில் சென்றிருந்தபோது, பட்டப்பகலில் வீடுகளை உடைத்து நகைகள் திருட்டுப் போயுள்ளமை தொடர்பில் அண்மையில் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழான மாவட்டக் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவு விசாரணைகளை முன்னெடுத்தது.

பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்சிஸ் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் நாவற்குழி மற்றும் யாழ்ப்பாணம் ரயில் நிலைய வீதியைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 7 பவுண் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன” என்றும் பொலிஸார் கூறினர்.

# வெள்ளத்தில் முற்றாக மூழ்கியது யாழ். மாநகர்


ஸ்ரான்லி வீதி




யாழ். நகர் மத்தி


யாழ். பஸ் நிலையம்




கோயில் வீதி


பருத்தித்துறை வீதி, நல்லூர்





நக்கா வீதி - மருதடி

# பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்க இடமில்லை

## இராணுவத் தளபதி கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 06

வெளிநாடுகளில் உள்ள புலி உறுப்பினர்கள், இலங்கையில் ஸ்திரமற்ற நிலைமையை உருவாக்குவதற்கு தொடர்ச்சியாக முயற்சிக்கின்றனர்.இதற்காக முன்னாள் போராளிகளையும், வறுமையில் இருப்பவர்களையும் அவர்கள் இலக்குவைக்கின்றனர். ஆனால் அவர்களின் திட்டங்கள் கடந்தகாலங்களைப் போன்றே முறியடிக்கப் படும்.”

- இவ்வாறு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா சூளுரைத்தார்.

முன்னாள் பெண் போராளியொருவர் கிளைமோருடன் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

புலிகள் அமைப்பில் சிறது காலம் இருந்த பெண்ணொருவரே யாழ்ப்பாணம் இயக்கச்சி பகுதியில் இருந்து கிழக்கை நோக்கி குறித்த கிளைமோரை தனது கணவர் குழந்தை சகிதம் எடுத்துச் சென்றுள்ளார்.

இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினர்தான் இதனைக் கண்டுபிடித்தனர். அதன்பின்னர் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அந்தப் பெண்ணின் வீட்டுக்கு பின்பகுதியில் இருந்து கைக்குண்டும் மீட்கப்பட்டுள்ளது.

2009 இல் புலிகள் அமைப்பை இலங்கை நிலப்பரப்பில் நாம் தோற்கடித்தோம். எனினும், வெளிநாட்டில் வாழும் புலி உறுப்பினர்கள் புலிகளின் பிரிவினைவாத கருத்தாடலுக்கு உயிர் கொடுக்கின்றனர்.



உள்நாட்டிலுள்ள சிலரும் அதற்கு ஒத்துழைக்கின்றனர். வடக்கில் ஸ்தீரமற்றதொரு நிலையை உருவாக்குவதே அவர்களின் இலக்கு. இதற்கு முன்னரும் முயற்சித்தனர். அந்த முயற்சிகள் முறியடிக்கப்பட்டன. இனியும் அதற்கு இடமளிக்கப்படாது. அவர்களால் முன்னெடுக்கப்படும் அனைத்து முயற்சிகளையும் தோற்கடித்து நாட்டையும், மக்களையும் பாதுகாப்போம்.

முன்னாள் போராளிகள் புனர்வாழ்வின் பின்னர் சமூகமயப்படுத்தப் பட்டுள்ளனர். வறுமையில் வாடுபவர்களும் இருக்கின்றனர். அவ்வாறானவர்களுக்கு பணம் வழங்கியே ஸ்தீரமற்ற நிலைமையை உருவாக்குவதற்கு முயற்சிக்கப்படுகின்றது- என்றார்.

ஈழநாடு
Online
சம்பவங்கள்,
செய்திகள்
உடனுக்குடன்
அறிந்துகொள்ள...
www.eelanadu.lk

# பெரும்போக நெற்செய்கை மன்னாரில் பெரும் பாதிப்பு

மன்னார், டிசெ. 06

வங்கக்கடலில் நிலைகொண்ட தாழமுக்கம் காரணமாக மன்னார் மாவட்டத்தில் காற்றுடன் கூடிய மழை பெய்து வந்த நிலையில், பெரும்போக நெற் செய்கை பாதிப்படைந்துள்ளது.

கடும் மழை காரணமாக 90 வீதமான பெரும்போக நெற் செய்கை நீரில் மூழ்கியுள்ளது. தொடர்ச்சியாக வெள்ளப் பாதிப்பு ஏற்படும் நிலையில் முற்றாக விவசாயச் செய்கை அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை சுமார் 23ஆயிரத்து 953.5 ஏக்கர் பெரும்போக நெற் செய்கை மேற்கொள்ளப் பட்டுள்ள நிலையில், ‘புரெவி’ புயல் கரணமாக ஏற்பட்ட கடும் மழையைத் தொடர்ந்து விவசாயச் செய்கை நீரில் மூழ்கியுள்ளது.

பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள விவசாய நிலங்களில் சுமார் ஒரு அடிக்கு மேலாக வெள்ள நீர் தேங்கியுள்ளது. தொடர்ந்தும் இந்த நிலை காணப்பட்டால் பெரும்போக விவசாயம் முழுவதும் பாதிப்படையும் என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் 1061 ஏக்கர் விவசாயச் செய்கையும், நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் 4826.5 ஏக்கர் விவசாயச் செய்கையும், முசலி பிரதேச செயலர் பிரிவில் 3274 ஏக்கர் விவசாயச் செய்கையும், மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் 11925 ஏக்கர் விவசாயச் செய்கையும், மடு பிரதேச செயலர் பிரிவில் 2867 ஏக்கர் விவசாயச் செய்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை மடு பிரதேச செயலர் பிரிவில் சின்ன வலயன் கட்டு சிறிய நீர்ப்பாசனக் குளம் உடைப்பெடுத்துள்ளதோடு, முருங்கன், நானாட்டான் இரணை இலுப்பைக்குளம், மறிச்சுக்கட்டி, பாலம்பிட்டி சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் வான் பாய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



செய்தியின் பின்னணியில்....

# வாக்கு வங்கி அரசியல்?

- மாலி



'கார்த்திகைத் தீபம்' - இந்து மதத்தோடிணைந்த நிகழ்வொன்றெனினும், தமிழ் மக்களின் கலாசாரத்தோடு இணைந்ததொன்றாய் அதனைக் கொள்ளலாம். தத்துவங்கள் எல்லாவற்றையும் விடுத்துப் பார்த்தாலும் ஊர்கள்தோறும் வீடுகளில், வாயில்களில் ஒரு நாள் விளக்குகள் வரிசையாய் ஒளிர்கையில் அது மனங்களிலும் ஒரு மங்கள ஒளிர்வை ஏற்படுத்துகிறது.

ஆக, இக் கொண்டாட்டத்தை இம்முறை வடக்கு-கிழக்கு பகுதிகளில் அரசு படையினர் தமக்கான ஒரு 'கொண்டாட்டமாகவும்' மாற்றிக் கொண்டுவிட்டார்கள். பல இடங்களில் வீடுகளிலும் ஆலயங்களிலும் தீபமேற்றுவதையும், சொக்கப்பனை எரிப்பதையும் தடுப்பதற்கான முயற்சிகளில் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபட்டார்கள்.

இரு தினங்களுக்கு முன்னரான மாவீரர் தின சுடரேந்தலும், அதற்கான அரசின் தடையும், நீதி மன்ற நடவடிக்கைகளும், நீதிமன்றத் தீர்ப்புகளும் கார்த்திகைத் தீபமேற்றுவதில் இக்குழப்பம் ஏற்படுவதற்கும், குழப்பத்தை ஏற்படுத்துவதற்கும் ஏதுவாய் அமைந்தன. சரியான புரிதலின்றியும், தவறான புரிதலிலும் இவை நடந்திருக்கின்றன. அதேவேளை, துச்சமான ஒரு மனப்பாங்குடனும் நடந்திருக்கின்றன என்பதை சில ஆலயங்களிலும் சில இடங்களிலும் நிகழ்ந்ததாக வெளிவந்த செய்திகள் தெளிவாக உணர்த்துகின்றன.

நிகழ்ந்த இச்சம்பவம் அரசியல் மொழியில், 'ஒரு பொது முக்கியத்துவம் வாய்ந்த அவசர விடயம்'. இதனை தமிழ் அரசியல்வாதிகள் எப்படி உணர்ந்திருக்கிறார்கள்?

இது, 'பட்ஜட்' விவாத காலம். பாராளுமன்றத்தில் மூன்றாம் வாசிப்பின் மீதான குழுநிலை விவாதம் தினமும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம். பி., எஸ். சிறிதரன், மறுநாள் அமைச்சு ஒன்றின் மீதான நிதி ஒதுக்கீட்டில் இது தொடர்பில் பிரஸ்தாபித்தார். எனினும், அரசுதரப்பில் எவ்வித பிரதிபலிப்பும் இருக்கவில்லை. இராணுவ அடக்குமுறை குறித்து அரசுக்கு கடிதம் எழுத, தமிழ்த் தேசிய கட்சிகளின் கூட்டத்தில் தீர்மானித்திருப்பதாக பின்னர் செய்தி வெளியாகியிருக்கிறது.

பாராளுமன்றத்தில், 'பட்ஜட்' குழுநிலை விவாத காலத்தில் ஒத்திவைப்பு பிரேரணை மீதான கேள்விகளுக்கு சில மட்டுப்படுத்தல்கள் உண்டு. எனினும், பொது முக்கியத்துவம் வாய்ந்த அவசர விடயம் ஒன்றில் கட்சித் தலைவர், சபை கூடுவதற்கு முன்னதாக சபாநாயகருக்கு முன்னறி வித்தல் மூலமோ அல்லது பாராளுமன்ற செயலாளர் நாயகம் மூலம் தொடர்பான அமைச்சருக்கு தெரியப்படுத்துவதன் மூலமோ இவ் விவகாரத்தை பாராளுமன்றத்தில் எழுப்பியிருக்க முடியும் என்றே எண்ணத் தோற்றுகிறது.

மாவீரர் தின தடை விவகாரம் வாக்கு வங்கியைப் பாதிக்கும் அளவுக்கு இது பாதிக்காது என்பதும், 'அரசியலுக்கு பிணம் ஒன்று தேவை' என்பதுமான நடவடிக்கைகளாக, இவை தெரிகின்றன. •

# கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் ஒத்துழைப்பு அவசியம்

## மருத்துவர் சுதத் சமரவீர வலியுறுத்து




கொழும்புடிசெ.06

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என தொற்று நோய் விஞ்ஞான பிரிவின் தலைவர் விசேட மருத்துவர் சுதத் சமரவீர வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

சில மாவட்டங்களில் நோயாளர்கள் பதிவாகும் போது நாளாந்தம் 10 ஆயிரம் முதல் 13 ஆயிரம் வரையிலான பி.சி.ஆர். பரிசோதனைகள் அப்பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

அவர்களில் பெருமளவானோர் அந்த மாவட்டங்களில் ஏழுமாறாகத் தெரிவு செய்யப்படுபவர்களாவர்.

இந்தப் பரிசோதனைகளில் மிகவும் குறிப்பிடத்தக்களவான நோயாளர்களே கண்டறியப்படுகின்றனர்.

பின்னர் அவர்களின் தகவல்களை ஆராயும்போது, தற்போதைய கொத்தணிகளுடன் பெரும்பாலானோருக்குத் தொடர்புள்ளமை தெரியவருகிறது.

எனவே, தற்போது கொரோனா தொற்று பரவல் நிலை ஓரளவு கட்டுப்பாட்டு நிலையில் உள்ளது.

கொரோனா தொற்று பரவலை முழுமையாகக் கட்டுப்படுத்த அரசாங்கத்தின் ஒத்துழைப்பு எவ்வளவு அவசியமோ அதற்குச் சமாந்தரமாக பொது மக்களின் ஒத்துழைப்பும் அவசியம்.

இதேவேளை, தற்போது வரை கொரோனா வைரஸ் தொற்றுக்கான பொதுவான தடுப்பூசி ஒன்று உறுதிப்படுத்தப்படவில்லை.

பிரித்தானியாவில் இன்னும் ஒரு வாரத்துக்குள் புதிய தடுப்பூசி வழங்கல் ஆரம்பிக்கப்பட உள்ளதாக அறியக் கூடியதாகவுள்ளது.

எனினும், உலகில் தற்போது வரையில் பொதுவாகத் தடுப்பூசியை வழங்குவது தொடர்பில் எந்தவொரு தடுப்பூசியும் ஏதாவது ஒரு வகையில் உறுதிப்படுத்தப்படவில்லை.

அத்துடன், அங்கீகரிக்கப்படவுமில்லை என்பதுடன், தற்போதும் சில தடுப்பூசிகள் பரிசோதனை மட்டத்திலேயே உள்ளன.

இந்த ஆய்வுகள் வெகுவிரைவில் நிறைவடைந்து அது தொடர்பில் தீர்மானம் விரைவில் மேற்கொள்ளப்படும் என நாங்கள் எதிர்பார்த்துள்ளோம்.

அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் பொதுப்பயன்பாட்டுக்காக ஏதாவது ஒரு தடுப்பூசி தயாராகும் என்பது உலக சுகாதார ஸ்தாபனத்தினதும், தங்களினதும் மதிப்பீடாகும் என்றும் அவர் தெரிவித்தார். (எ)

# மஹர சிறைச்சாலையில் உயிரிழந்த இருவர் அடையாளம் காணப்பட்டனர்

## அஜித் ரோஹண தெரிவிப்பு



கொழும்பு,டிசெ.06

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட திடீர் கலவரத்தில் உயிரிழந்த இருவரின் உடல்களை உறவினர்கள் அடையாளம் காட்டினர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதில் ஒருவர் ஜா-எல பகுதியைச் சேர்ந்த 39 வயது நபர் எனத் தெரிவித்தார்.

அவர் மீது போதைப் பொருள் கடத்தல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன. மற்றொருவர் வத்தளையைச் சேர்ந்த 31 வயது நபர் எனவும் அவர் மீதும் போதைப்பொருள் கடத்தல் தொடர்பான குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டார்.

மஹர சிறைச்சாலைக் கலவரத்தின்போது உயிரிழந்த மேலும் 9 பேரின் உடல்களை அடையாளம் காணவேண்டியுள்ளது.

உயிரிழந்தவர்கள் தொடர்பில் ராகமை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இந்த சிறைச்சாலைக் கலவரத்தில் உயிரிழந்தவர்களில் 8 பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் என்பது உறுதியாகியுள்ளது.

இதேவேளை, சிறைக் கலவரம் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளரின் உத்தரவின் பேரில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள சி.ஐ.டி.யினர் நேற்று முன்தினம் வத்தளை நீதிவான் முன்னிலையில் அறிக்கையொன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

மஹர சிறைச்சாலைக் கலவரம் தொடர்பில் 20 சி.ஐ.டி. அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்- என்றார். (எ)



# ஆட்சியைக் கவிழ்க்கலாம் என்று கனவிலும் நினைக்கவேண்டாம்

## அமைச்சர் ஜோன்ஸ்டன் தெரிவிப்பு



**கொழும்பு, டிசெ. 06**

**மக்களுக்குப் பிரச்னை இருப்பதை அரசாங்கம் என்ற வகையில் நாங்கள் உணர்கின்றோம். அதற்காக இந்த அரசாங்கத்தை வீழ்த்த மக்கள் இடமளிக்கப்போவதில்லை. அதனால் எமது அரசாங்கத்தை இலகுவில் வீழ்த்தலாம் எனக் கனவிலும் நினைக்க வேண்டாம். அத்துடன் 19ஆவது திருத்தம் இல்லை என்றால் கடந்த அரசாங்கம் 3 வருடத்திலேயே வீட்டுக்குச் சென்றிருக்கும் என ஆளும்கட்சி பிரதம கொறடா அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கைத்தொழில், வர்த்தக அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதியொதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

கடந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது முதல் எம்மைப் பழிவாங்கும் நடவடிக்கையையே மேற்கொண்டது. ச.தொ.ச. நிறுவனத்தில் மோசடி இடம்பெற்றதாகத் தெரிவித்து என் மீது பொய்க் குற்றச்சாட்டுக்களைப் புனைந்து சிறையிலடைத்தனர். எமது காலத்தில் ஒருபோதும் ச.தொ.ச. நட்டமடையவில்லை. பாரியளவில் லாபமீட்டும் நிறுவனமாக இருந்தது. ஆனால் கடந்த அரசாங்கக் காலத்தில் பாரியளவில் நட்டமடைந்தது.

அத்துடன் நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவதாகத் தெரிவித்து ஆட்சிக்கு வந்த இவர்கள், ஆட்சிக்கு வந்து 2 மாதங்களில் மத்திய வங்கியை கொள்ளையடித்தார்கள். மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்தைப் பழிவாங்கும் வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ என அனைவரையும் பொய்க் குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்து சிறையிலடைத்தனர்.

அவ்வாறு நாங்கள் செயல்பட்டிருந்தால் இன்று எதிர்க் கட்சியில் இருக்கும் அதிகமானவர்கள் சிறையில் இருந்திருப்பர். ஆனால் நாங்கள் அவ்வாறு செயல்படமாட்டோம்.

கடந்த அரசாங்கத்தின் பழிவாங்கலுக்குள்ளாகி சிறையில் இருந்தவர்கள்தான் இன்று விடுதலையாகி இருக்கின்றனர். பிள்ளையான் எம்.பி. 5 வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அதேபோன்று துமிந்த சில்வா இன்னும் சிறையில் இருக்கின்றார். அதனால் ஜனாதிபதி துமிந்த சில்வாவுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

மேலும் கடந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் 19ஆவது திருத்தத்தை கொண்டுவந்து ஆட்சியைப் பாதுகாத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருந்தது. அதனால்தான் கடந்த அரசாங்கம் நான்கரை வருடம் நீடித்தது. இல்லாவிட்டால் 3 வருடங்களில் வீட்டுக்குச் சென்றிருக்கும். தேர்தல் நடத்த அச்சப்பட்டனர். பிரதேச சபை தேர்தலைக்கூட வெற்றிகொள்ள முடியாமல்போன அரசாங்கமாகும். அதனால் தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் கொரோனா வைரஸ் தொற்றால் பொருளாதாரத்தில் சற்று வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அதனால் மக்களுக்கும் இன்று பிரச்னை இருக்கின்றது என்பது எமக்குத் தெரியும்.

அதனால் மக்களுக்கு தற்போது இருக்கும் பிரச்னையைப் பயன்படுத்திக்கொண்டு இந்த அரசாங்கத்தை வீழ்த்தலாம் எனக் கனவிலும் நினைக்க வேண்டாம். அதற்கு மக்கள் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை - என்றார்

(எ)

# காத்தான்குடி கடலில் குளித்த இளைஞன் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு,டிசெ.06

மட்டக்களப்பு காத்தான்குடிக் கடலில் நேற்றுமுன்தினம் மதியம் நீராடியபோது காணாமல்போன இளைஞனின் சடலம் நேற்றுக்காலை பூநொச்சிமுனைக் கடற்கரையோரம் கரையொதுங்கியுள்ளது.

சடலம் கரையொதுங்குவதைக் கண்ட பிரதேச மீனவர்களும் பொதுமக்களும் சடலத்தை மீட்டு கரைக்குக் கொண்டுவந்தனர்.

நேற்று முன்தினம் மதியம் காத்தான்குடி ஆறாம் குறிச்சியிலுள்ள கடலில் நீராடியபோது இவ்விளைஞன் காணாமால் போயிருந்தார்.

மூன்று இளைஞர்கள் கடலில் நீராடச் சென்றதாவும் அதில் ஒரு இளைஞனே இவ்வாறு காணாமல்போனதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

புதிய காத்தான்குடி பதுறியா பகுதியிலுள்ள மரைக்கார் லேனைச் சேர்ந்த 20 வயது முஹமட் ஜவுபர் முஹமட் ஸைனி எனும் இளைஞனே இவ்வாறு காணாமல்போய் சடலமாக மீட்கப்பட்டவர் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

(எ)

# கொரோனா தொற்றால் 130 பேர் உயிரிழப்பு!

கொழும்பு,டிசெ.06

கொரோனா வைரஸ் தொற்றால் நேற்று ஒருவர் உயிரிழந்த நிலையில் வைரஸ் தொற்றால் ஏற்பட்ட மரணங்களின் மொத்த எண்ணிக்கை 130 ஆக அதிகரித்துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட தகவலின்படி இந்நபர் பிலியந்தலையைச் சேர்ந்த 72 வயது நபர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானதையடுத்து, தொற்றுநோய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

(எ)

# 20 ஆயிரத்தைத் தாண்டியது குணமடைந்தோர் எண்ணிக்கை

கொழும்பு,டிசெ.06

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களில் பூரண குணமடைந்தோர் எண்ணிக்கை நேற்று 20 ஆயிரத்தைத் தாண்டியது.

கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் 652 பேர் பூரணமாகக் குணமடைந்து மருத்துவமனைகள் மற்றும் நோயாளர் பராமரிப்பு மையங்களிலிருந்து வெளியேறினர்.

அதன்படி, இதுவரை 20 ஆயிரத்து 90 பேர் பூரண குணமடைந்து மருத்துவமனைகளிலிருந்து வெளியேறினர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

(எ)

# 269 இலங்கையர் நாடு திரும்பினர்

கொழும்பு, டிசெ. 06

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 269இலங்கையர்கள் நேற்றுக் காலை நாட்டை வந்தடைந்தனர்.

இதற்கமைய, ஐக்கிய அரபு இராச்சியத்தின் அபுதாபி நகரில் இருந்து 101 பேரும், டுபாயில் இருந்து 76 பேரும், கட்டாரின் டோஹா நகரில் இருந்து 47பேரும் இந்தியாவின் சென்னை நகரில் இருந்து 45 பேரும் இவ்வாறு நாட்டை வந்தடைந்துள்ளனர்.

அனைவருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என விமான நிலையத் தகவல்கள் தெரிவித்தன.






# புலம்பெயர் தமிழர் முதலீடு செய்ய தெற்கிலும் வாய்ப்பு வழங்குவோம்

## என்கிறார் விமல் வீரவன்ஸ



கொழும்பு,டிசெ.06

வடக்கு - கிழக்கில் பிரதான தொழில்சாலைகளை மீண்டும் பலப்படுத்தி தமிழ், முஸ்லிம் மக்களுக்கு முழுமையாக வேலைவாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுக்க சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளோம் என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

புலம்பெயர் தமிழ் முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளைச் செய்ய விரும்பினால் வடக்கில் மாத்திரமல்ல தெற்கில் வேண்டுமானாலும் முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபட முழுமையான ஏற்பாடுகளை செய்துகொடுக்கத் தயாராகவுள்ளோம்.

வடக்கு - கிழக்கிலுள்ள தொழில்சாலைகளை மீளவும் இயக்கி நாட்டின் தேசிய பொருளாதாரத்தில் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளவே நாம் வேலைத்திட்டங்களை உருவாக்கியுள்ளோம். வாழைச்சேனை தொழில்சாலை, ஒட்டுச்சுட்டான் தொழில்சாலை, ஆனையிறவு உப்பளம் உள்ளிட்ட பிரதான தொழில்சாலைகளை மீள் அபிவிருத்தி செய்வதுடன், பரந்தன் இரசாயன தொழில்சாலையையும் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கவுள்ளோம். பரந்தன் இரசாயன தொழில்சாலை உள்ள பிரதேசத்தை இரசாயான வலயமாக மாற்றியமைக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

முறையான சூழலியல் ஆய்வுகளை செய்தும், சுற்றுச்சூழல் நிலைமைகளைக் கருத்தில் கொண்டும் அதற்கு ஏற்றால் போல் இரசாயன வலயம் உருவாக்கப்படும்.

இந்த வேலைத்திட்டங்களில் வடக்கு - கிழக்கு மக்களுக்கான பணிகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும். இதில் வடக்கு-கிழக்கு மக்கள் எந்த சந்தேகமும் கொள்ளத்தேவையில்லை- என்றார்.

இலங்கை அரசாங்கம் மீதான நம்பிக்கையின்மையே வெளிநாட்டிலுள்ள தமிழர்கள் முதலீடுகளைச் செய்ய முன்வராமைக்குக் காரணம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்திருந்தார். இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே விமல் வீரவன்ஸ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

(எ)

# ‘என்னால் நகரக்கூட முடியாமல் இருந்தது’

## கொரோனா தடுப்பூசி குறித்த அனுபவத்தை நேற்று வெளியிட்டார் பிரிட்டன் இளைஞன்

**லண்டன்,டிசெ.06**

**கொரோனா தடுப்பூசியை பொதுமக்களுக்கு அளிக்க உலகில் முதல் நாடாகப் பிரிட்டன் அனுமதி அளித்துள்ள நிலையில், தடுப்பூசி போட்டுக் கொண்ட முதல் 24 மணி நேரத்தில் என்ன நடக்கும் என்பது தொடர்பில் இளைஞர் ஒருவர் தமது அனுபவத்தைப் பகிர்ந்துள்ளார்.**



கொரோனா தடுப்பூசி பொதுமக்கள் பயன்பாட்டுக்கு வர இருக்கிறது. நாளை திங்கட்கிழமை தொடங்கி பிரிட்டனில் முதல் கொரோனா டோஸ் வழங்கப்பட உள்ளது.

அமெரிக்காவில் டிசெம்பர் 18 முதல் தடுப்பூசி வழங்க முடிவாகி உள்ளது என டிரம்ப் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதுவரை அமெரிக்க நிறுவனங்களான பைஸர் மற்றும் மாடர்னா மருந்து நிறுவனங்களின் தடுப்பூசிகளே பொதுமக்கள் பயன்பாட்டுக்கு தயாராகி உள்ளன.

உலகில் முதல் நாடாக தடுப்பூசி டோஸ்களை பொதுமக்களுக்கு அளிக்க பிரிட்டன் அனுமதி அளித்துள்ள நிலையில், தற்போது இரண்டாவதாக இஸ்லாமிய நாடான பஹ்ரைன் அனுமதி அளித்துள்ளது.

இதுவரை இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி, இந்தியா உள்ளிட்ட கடுமையாக பாதிக்கப்பட்ட நாடுகள் எவையும் திகதியை அறிவிக்கவில்லை.

இதனிடையே, கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்ட பின்னர் உடம்பில் என்ன மாறுதல் ஏற்படும் என்பது தொடர்பில், இளைஞர் ஒருவர் தமது அனுபவத்தை பகிர்ந்துள்ளார்.

மாடர்னா மருந்து நிறுவன கொரோனா தடுப்பூசி இறுதி கட்டச் சோதனையில் 24 வயதான இவர் பங்கேற்றுள்ளார்.

பைஸர் மற்றும் மாடர்னா நிறுவனங்களில் தடுப்பூசிகளை ஒவ்வொருவரும் இரண்டு டோஸ்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

காய்ச்சலுக்கான டோஸ் எடுத்துக் கொள்வது போன்றே முதலில் தமக்கு ஒரு உணர்வு ஏற்பட்டதாக கூறும் அந்த இளைஞர், முதலில் ஒரு முள் குத்தியது போன்று இருந்தது எனவும், பின்னர் உடல் முழுவதும் அது வியாபித்தது என்றார்.

மாலையில் தோள்பட்டை உயரத்திற்கு மேலே கையைத் தூக்கும்போது அவருக்கு வலி ஏற்பட்டது. ஆனால் அதனால் பக்க விளைவுகள் ஏதும் தமக்கு ஏற்படவில்லை என கூறிய அந்த இளைஞர்,

இரண்டாவது டோஸ் எடுத்துக் கொண்ட பின்னர் அதன் தாக்கம் தெரிய வந்தது என்றார்.

மருத்துவமனையில் வைத்து தமக்கு பெரிதாக ஏதும் தெரியவில்லை என குறிப்பிட்ட அவர், வீட்டுக்கு திரும்பியதும், நிலைமை மிகமோசமடைந்தது என்றார்.

மாலையில் லேசான காய்ச்சல் கண்டது என்றவர், உடல் முழுவதும் வலியும், நடுக்கமும் ஏற்பட்டது என தெரிவித்துள்ளார்.

மட்டுமின்றி தம்மால் நகரவே முடியாத அளவுக்கு அதன் தாக்கம் இருந்தது என்றார். ஆனால் அந்த இரவு முடிந்து காலையில் எழுந்ததும் உடல் வலியும் காய்ச்சலும் குறைந்திருந்தது என்றார்.

இது சரியான அறிகுறி என குறிப்பிட்ட மருத்துவர் ஒருவர், நமது உடலுடன் கொரோனா தடுப்பூசி ஒத்துழைக்கிறது என்பதை இது காட்டுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



# பாம்புகளை தன் பிள்ளைகளாக வளர்க்கின்றார் பௌத்த துறவி!

மியான்மரை சேர்ந்த பௌத்த துறவியொருவர், கொடிய பாம்புகளை தனது பிள்ளைகளாக நினைத்து வளர்த்துவருகிறார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன

69 வயதான அந்தத் துறவி வீடுகள் உள்ளிட்ட இடங்களில் பிடிபடும் பைத்தான், வைபர், கோப்ரா உள்ளிட்ட பாம்புகளை வாங்கி வந்து யாங்கூனிலுள்ள ஆச்சிரமத்தில் வளர்க்கிறார். பாம்புகள் கொல்லபடுவதை தடுப்பதற்காகவும், சீன பாரம்பரிய மருந்துக்காக வும் கள்ளச் சந்தையில் விற்க கடத்தப்படுவதை தடுப்பதற்காகவும் இதுபோன்று செய்வதாக தெரிவிக்கும் அவர், பாம்புகளை கண்டு அஞ்சாமல் தோளில்மாலையாக போட்டு அமர்கிறார்.

# ஜனவரி முதல் மூன்று கட்டங்களாக இலவச ஊசி, ஆனால் கட்டாயமல்ல!

## பிரான்ஸ் அரசு அறிவிப்பு

பாரிஸ், டிசெ. 06

நாட்டு மக்கள் அனைவருக்கும் வைரஸ் தடுப்பூசி ஏற்றும் திட்டத்தின் விவரங்களை பிரெஞ்சு அரசு வெளியிட்டிருக்கிறது. அதன்படி தடுப்பூசி அனைவருக்கும் கட்டாயம் அல்ல. ஆனால் சகலருக்கும் அது இலவசம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நாடெங்கும் தடுப்பூசி ஏற்றும் இந்த மாபெரும் சுகாதார நடவடிக்கைக்குப் பொறுப்பாக பிரபல நோய் எதிர்ப்பியல் (Immunologist) நிபுணரான மருத்துவப் பேராசிரியர் அலன் பிசெரை (Alain Fischer) அரசு நியமித்திருக்கிறது.

தடுப்பூசி ஏற்றும்பணி ஜனவரி 2021 முதல் மூன்று கட்டங்களாக முன்னெடுக்கப்படும். அந்த மாதம் ஒரு மில்லியன் பேருக்கு முதலில் முன்னுரிமை அடிப்படையில் ஊசி செலுத்தப்படும். மூதாளர் இல்லங்களில் வசிப்போர் இதில் அடங்குவர். நோயாளர்கள் மற்றும் பலவீனமானவர்களுக்கு பெப்ரவரி மாதத்திலும் ஏனையோருக்கு படிப்படியாக வரும் வசந்த காலப்பகுதியிலும் ஊசி போடப்படும்.

நாட்டு மக்களுக்கு இலவசமாகத் தடுப்பூசியை வழங்குவதற்காக 2021 சமூகப் பாதுகாப்பு நிதிப் பாதீட்டில் 1.5 பில்லியன் யூரோக்கள் ஒதுக்கப்படுகிறது.

ஒருவர் சில வார இடைவெளிக்குள் இரண்டு தடவைகள் ஏற்றிக் கொள்வது அவசியம் என்பதால் 100 மில்லியன் பேருக்கு என்ற கணக்கில் 200 மில்லியன் தடுப்பூசி புட்டிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

அமெரிக்கா - ஜேர்மனி கூட்டு மருந்துத் தயாரிப்பில் உருவான “பைஸர் - பயோஎன்ரெக்” தடுப்பூசியே (Pfizer / BioN Tech vaccine) முதலில் மக்களுக்கு ஏற்றப்படவுள்ளது.

வெளிப்படைத் தன்மை தொடர்பான அரசமைப்புச் சட்டங்களுக்கு அமைய தடுப்பூசி ஏற்றும் திட்டம் இம்மாத இறுதியில் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு விடப்படும்.

தடுப்பூசியின் அவசியத்தையும் அதன் நம்பகத் தன்மையையும் அனைத்து மருத்துவப்பணியாளர்களும் பொது மக்களுக்கு விளக்கும் வகையில் கூட்டு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த செயற் திட்டத்துக்கு கல்வியியலாளர்கள், அறிவியல் நிபுணர்களது சகலரதும் ஒத்துழைப்பும் கோரப்பட்டுள்ளது.

# 2020 ஆம் ஆண்டின் சிறந்த குழந்தையாக இந்திய வம்சாவளியை சேர்ந்த கீதாஞ்சலி

வாஷிங்ரன், டிசெ.06

2020 ஆம் ஆண்டின் சிறந்த குழந்தையாக இந்திய அமெரிக்கரான 15 வயது கீதாஞ்சலி ராவ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின், கொலராடோ மாகாணத்தைச் சேர்ந்த, இந்திய வம்சாவளி சிறுமி கீதாஞ்சலி ராவ். இவர், ‘கைன்ட்லி’ என்ற, கைபேசி செயலியை உருவாக்கினார். இது, ‘ஒன்லைன்’ துன்புறுத்தல்களை, ஆரம்ப கட்டத்திலேயே கண்டுபிடித்து, பயனாளியை எச்சரிக்கும் திறன் கொண்டது. ‘VI’ எனப்படும் செயற்கை நுண்ணறிவு திறன் உதவியுடன், இந்த செயலி இயங்குகிறது

மேலும், டெத்திஸ் என்ற பெயரில் இவர் உருவாக்கிய கருவியின் மூலம் நீரில் கலந்துள்ள மாசு தன்மை குறித்து அறிந்து கொள்ள முடியும். போதைப் பொருளுக்கு அடிமையாவதில் இருந்து மீள்வது உள்ளிட்ட சமூகப் பிரச்சினைகள் குறித்தும் அமெரிக்கா முழுவதும் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார் கீதாஞ்சலி ராவ். இந்நிலையில், அமெரிக்காவின் பிரபல ‘ரைம்’ இதழ் நடத்திய போட்டியில் 5 ஆயிரம் போட்டியாளர்களுக்கு இடையே 2020ஆம் ஆண்டின் சிறந்த குழந்தையாகத் தேர்வு செய்யப்பட்டார்.

இதுகுறித்து கீதாஞ்சலி ராவ் கூறியதாவது:

கிரகித்துக் கொள்ளுங்கள், அதை உங்கள் திறமையால் அலசுங்கள், ஆய்வு செய்யுங்கள், அதன் மீது கட்டமைப்பை உருவாக்குங்கள், தொடர்பு கொள்ளுங்கள் என்ற 5 செயல்பாடுகளை




பின்பற்றி வருகிறேன். நான் சில கண்டுபிடிப்புகளை உருவாக்கி உள்ளேன். என்னால் அதை உருவாக்கும் போது யார் வேண்டுமானாலும் அதைச் செய்ய முடியும்.

உலகில் எத்தனையோ பிரச்னைகள் தற்போது உருவாகியுள்ளன. அவை எங்கள் தலைமுறைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன. தற்போது கொரோனா வைரஸ் பெருந்தொற்று உலகம் முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. நம்மால் உருவாகாத சில பிரச்னைகள் உலகில் இருக்கத்தான் செய்கின்றன. அதை தீர்க்க வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம். பருவநிலை மாற்றம், சைபர் புல்லியிங் எனப்படும் ஒன்லைன் சீண்டல்கள் போன்ற பிரச்சினைகளை நாம் சமாளிக்க வேண்டும்-என்றார்.

# தமிழகத்தில் மழை நீடிக்கும்

சென்னை, டிசெ. 06

மன்னார் வளைகுடா பகுதியில் நிலைகொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்தத்தாழ்வு மண்டலம் வலுவிழந்தது. இதனால் தமிழகத்தில் 2 நாள்களுக்கு மழை நீடிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மன்னார் வளைகுடா கடல் பகுதியில் நிலைகொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தொடர்ந்து அதே இடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை வரை நிலவியது.

இது காற்றழுத்தத்தாழ்வு மண்டலமாக வலுவிழந்து, மெதுவாக மேற்கு-தென்மேற்கு திசையில் நகர்ந்தது. மேலும் வலுவிழந்து, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக ராமநாதபுரம் வழியாக மேற்கு-தென்மேற்கு திசையில் தெற்கு கேரள பகுதியை நோக்கிச் செல்லும் எனவும் அநேக இடங்களில் இன்று மிதமான மழை பெய்யக்கூடும் என இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டலத் தலைவர் எஸ்.பாலச்சந்திரன் தெரிவித்தார்.

# வியாஸ்காந்துக்கு நாட்டு மக்கள்

## இன மத பேதம் கடந்து வாழ்த்து!



இலங்கையில் விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாமல் நடைபெற்றுவரும் லங்கா பீரியர் லீக் ரி-20 தொடரில், கிரிக்கெட் அறிமுகத்தை பெற்றுக்கொண்ட விஜயகாந் வியாஸ்காந்துக்கு, இன, மத பேதம் கடந்து இலங்கை மக்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

அவரது புகைப்படத்தை சமூகவலைத்தளத்தின் ஊடாக பகிரும் கிரிக்கெட் இரசிகர்கள், அவருக்கு சிறந்த கிரிக்கெட் எதிர்காலம் அமைய வேண்டுமென வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். முன்னாள் வீரர்களான குமார் சங்கக்கார, மஹேல ஜயவர்தன, ரஸல் ஆர்னல்ட் மற்றும் அஞ்சலோ மத்தியூஸ் ஆகியோர் டுவிட்டர் பக்கத்தின்ஊடாக வாழ்த்து தெரிவித்தனர். அத்துடன்இலங்கை அரசியல்வாதிகளும் வாழ்த்து தெரிவித்திருந்தனர்.

அத்துடன் நேற்றுத் தனது 19 ஆவது பிறந்தநாளை கொண் டாடிய வியாஸ்காந்துக்கு சக வீரர்கள், இரசிகர்கள் என பலரும் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் முத்தையா முரளிதரனுக்கு பிறகு ஒரு தமிழனாகப் பேசப்படும் வீரராக மாறியுள்ள வியாஸ்காந், நேற்று முந்தினம் வெள்ளிக் கிழமை நடைபெற்ற கொழும்பு கிங்ஸ் அணிக்கெதிரான போட்டியில், யாழ்ப்பாண ஸ்டாலியன்ஸ் அணியை பிரதிநிதித்து வப்படுத்திக் களமிறங்கினார். வியாஸ்காந், தனது துடுப்பாட்டத்திலும் ஆறுதல் அளிக்கும் வகையில் துடுப்பெடுத்தாடினார். 4 பந்துகளை எதிர் கொண்ட அவர் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இறுதி வரை களத்தில் இருந்தார்.

பின்னர் வலக்கை சுழற்பந்து வீச்சாளராக தன்னை அடையாளப்படுத்தி பந்துவீசிய வியாஸ்காந், முன்னணி வீரர்களான தினேஷ் சந்திமால், அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் ஆந்ரே ரஸ்ஸல் ஆகியோரை தனது பந்துவீச்சின் மூலம் திக்குமுக்காட வைத்தார். நான்கு ஓவர்களை வீசி 29 ஓட்டங்களை விட்டுக் கொடுத்த அவர், முக்கிய வீரரான அஞ்சலோ மத்தியூஸை ஆட்டமிழக்கச் செய்திருந்தார்.

துடுப்பாட்ட ஸ்டைலிலேயே கிரிக்கெட் வர்ணனையாளர்களின் கவனத்தை ஈர்த்திருந்திருந்த வியாஸ்காந், பந்துவீச்சிலும் அசத்தி தனது திறமையை நிரூபித்துள்ளார். இதனால் அவர் நிச்சயம் இலங்கை தேசிய அணிக்கு விளையாட வேண்டுமென இரசிகர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

## புதிய தெரிவுக் குழு

இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய தெரிவுக் குழுவுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, அந்தத் தெரிவுக் குழுவின் தலைவராக அசந்த டி மெல் நியமிக்கப்பட்டுள்ளார் என இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் உறுப்பினர்களாக சமிந்த மென்டிஸ், பிரமோத்ய விக்கிரமசிங்க, எம்.எ.டபிள்யூ.ஆர்.மதுரசிங்க, டி.நில்மினி குணரத்ன, ஹேமந்த தேவப்பிரிய மற்றும் எஸ்.எச்.யு.கர்ணன் ஆகியோர் நிய மிக்கப்பட்டுள்ளனர்.

இந்த குழுவுக்கு விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Sri Lanka Cricket



## யாழ்ப்பாண ஸ்டாலியன்ஸ் அணிக்கு முதல் தோல்வி!

லங்கா பிரீமியர் லீக் ரி-20 தொடரில், யாழ்ப்பாண ஸ்டாலியன்ஸ் அணி முதல் தோல்வியை தழுவியுள்ளது.

அம்பாந்தோட்டை மைதானத்தில் நேற்று முன் தினம் இரவு நடைபெற்ற 11ஆவது லீக் போட்டியில், யாழ்ப்பாண ஸ்டாலியன்ஸ் அணியும் கொழும்பு கிங்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொழும்பு கிங்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 148 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, வனிந்து ஹசரங்க 41 ஓட்டங்களையும் அவிஷ்க பெர்னான்டோ 26 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

கொழும்பு கிங்ஸ் அணியின் பந்துவீச்சில், குய்ஸ் அஹமட் 3 விக்கெட்டுகளையும் சமீர 2 விக்கெட்டுகளையும் மத்தியூஸ், உதான, கௌசல் மற்றும் ரஸ்ஸல் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 149 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய கொழும்பு கிங்ஸ் அணி, 19.2 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் கொழும்பு கிங்ஸ் அணி 6 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, தினேஷ் சந்திமால் ஆட்டமிழக்காது 68 ஓட்டங்களையும் ஆந்ரே ரஸ்ஸல் 32 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

யாழ்ப்பாண அணியின் பந்துவீச்சில், வனிந்து ஹசரங்க 2 விக்கெட்டினையும் வியாஸ்காந் மற்றும் சதுரங்க டி சில்வா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 51 பந்துகளில் 2 சிக்ஸர்கள் 7 பவுண்ரிகள் அடங்கலாக 68 ஓட்டங்களை பெற்றுக் கொண்ட தினேஷ் சந்திமால் தெரிவு செய்யப்பட்டார்.

இந்தப் போட்டியின் ஊடாக வலதுக் கை சுழற்பந்து வீச்சாளரான விஜயகாந் வியாஸ்காந், லங்கா பிரீமியர் லீக் ரி-20 தொடரில், அறிமுகத்தை பெற்றுக்கொண்டார்.

இதன்மூலம் யாழ். மண்ணிலிருந்து லங்கா பிரீமியர் லீக் ரி-20 தொடருக்கு தெரிவான முதல் தமிழன் என்ற பெருமையை அவர் பெற்றார்.



## ஆப்கன் வீரருக்கு 'கொரோனா'

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வீரர் முஜீப் உர் ரஹ்மானுக்கு 'கொரோனா' தொற்று உறுதியானது.

ஆப்கானிஸ்தான் 'சுழல்' வீரர் முஜீப் உர் ரஹ்மான். ஐ.சி.சி., 'ருவென்ரி-20' பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் 2ஆவது இடத்தில் உள்ள இவர், ஆஸ்திரேலியாவில் நடக்கும் 'பிக் பாஷ் லீக்' தொடருக்கு பிரிஸ்பேன் ஹீட் அணியில் ஒப்பந்தமானார். வரும் டிசெ. 10 இல் தொடங்கவுள்ள இத்தொடரில் பங்கேற்பதற்காக கடந்த வாரம் முஜீப் உர் ரஹ்மான் அவுஸ்திரேலியா வந்தார். ஹோட்டலில் தனிமைப்படுத்தப்பட்ட இவருக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் பரிசோதனை நடத்தப்பட்டது. இதில் 'கொரோனா' தொற்று கண்டறியப்பட்டதால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இதனால் இவர், பிரிஸ்பேன் ஹீட் அணி விளையாட உள்ள முதலிரண்டு போட்டியில் பங்கேற்பது சந்தேகம்.

## பாக். அணி பயிற்சிக்கு தடை

பாகிஸ்தான் அணியில் உள்ள 8 பேருக்கு 'கொரோனா' உறுதியானதால், பயிற்சி மேற்கொள்வதற்கான தடை நீட்டிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்து சென்றுள்ள பாகிஸ்தான் அணி, 3 'ருவென்ரி-20' (டிசெ. 18, 20, 22), 2 டெஸ்ட் (டிசெ. 26-30 மற் றும் 2021, ஜன. 3-7) போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இதற்காக 34 வீரர்கள் உட்பட 54 பேர் கொண்ட பாகிஸ்தான் அணியினர், கிறைஸ்ட்சர்ச் நகரில் உள்ள ஹோட்டலில் 14 நாட்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர். இதுவரை நடத்திய பரிசோதனையில் 8 பேருக்கு 'கொரோனா' தொற்று கண்டறியப்பட்டுள்ளது. தவிர, இவர்கள் கொரோனா தடுப்பு விதிமுறைகளை சரியாக பின்பற்றவில்லை என்று முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. இதனால் குழுவாக பயிற்சி மேற்கொள்ள இவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதி நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், டிசெம்பர் 4ஆம் திகதியுடன் பாகிஸ்தான் அணியினரின் தனிமைப்படுத்திக் கொள்ளும் காலம்நிறைவடையவேண்டும். ஆனால் 8 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளதால், வரும் டிசெ. 9 வரை தனிமைப்படுத்துதல் நீட்டிக்கப்பட்டுள்ளது. அதுவரை இவர்களால் பயிற்சி மேற்கொள்ள முடியாது. அதன்பின், நியூசிலாந்து அரசின் அனுமதியுடன் வலைப் பயிற்சியில் ஈடுபட முடியும். இதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, அதிருப்தி தெரிவித்துள்ளது. கொரோனாவால் பாதிக்கப்படாதவர்களை பயிற்சி மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது.



# பாராளுமன்றில் அங்கம் வகிக்க தகுதியற்றவர் சரத் வீரசேகர

## மாவை சேனாதிராஜா கடும் எதிர்ப்பு



யாழ்ப்பாணம்,டிசெ.06

**தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்ததைப்போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இல்லாதொழிக்க வேண்டும் என்ற அமைச்சர் சரத் வீரசேகரவின் கருத்து மிகமோசமான சர்வாதிகார, இராணுவமயமாக்க சிந்தனையின் வெளிப்பாடாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.**

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்றுக் கொண்ட சரத் வீரசேகர, இவ்வாறு இறுமாப்புடன் பேசுவது அவர் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கத் தகுதியற்றவர் என்பதையே வெளிப்படுத்துகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கினால் அதற்குக் கூட்டமைப்பே பொறுப்புக்கூற வேண்டும் என்று பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவருடைய கருத்து தொடர்பில் வினவியபோதே மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அமைச்சர் சரத் வீரசேகரவின் கருத்து மிகமோச மான சர்வாதிகார, இராணுவமய சிந்தனையின் வெளிப்பாடாகும். அவர் உலக வரலாற்றை அறியாமல் பேசுகின்றார். உலக நாடுகள் பலவற்றிலும் விடுதலைக்காக - ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக இத்தகைய போராட்டங்கள் நடத்தப்பட்டிருப்பதுடன் அவற்றில் பல போராட்டங்கள் வெற்றியும் கண்டிருக்கின்றன.

இலங்கையில் தமிழினத்தின் உரிமைகளைப் பறித்து இராணுவத்தின் மூலம் அவர்களை அடக்கி ஒடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அரசாங்கத்தால் தமிழர்களின் அமைதிவழிப்போராட்டங்கள் அடக்கப்பட்டமையாலேயே விடுதலைப் புலிகள் ஆயுத மேந்திப்போராடுகின்ற ஒரு மாபெரும் சக்தியாக இந்நாட்டில் வளர்ந்தனர்.

எனவே, தமிழ் மக்களின் விடுதலை உணர்வையும் கொள்கையையும் சரத் வீரசேகரவாலும் வேறு எந்தவொரு அரசாங்கங்களாலும் அழித்துவிட முடியாது. தற்போது பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்றிருக்கும் சரத் வீரசேகர, விடுதலைப்புலிகளை அழித்ததைப்போன்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பையும் இல்லாதொழிக்க வேண்டும் என்று இறுமாப்புடன் பேசுவது அவர் பாராளுமன்றத்தில் இருக்கத் தகுதியற்றவர் என்பதையே வெளிப்படுத்துகின்றது - என்றார். (எ)

# மொறட்டுவ விபத்தில் இரு சிறுமிகள் மரணம்

கொழும்பு, டிசெ. 06

மொறட்டுவ பகுதியில் புதிய காலி வீதியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில் இரு சிறுமிகள் உயிரிழந்துள்ளனர். அத்துடன் அவர்களின் தாயான கர்ப்பிணிப் பெண்ணும் படுகாயமடைந்துள்ளார்.

இவர்கள் பாதையை கடக்க முற்பட்டவேளை, வேகமாக வந்த மோட்டார் சைக்கிளொன்று அவர்கள்மீது மோதுண்டதாலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் ஒன்று மற்றும் 7 வயதுடைய சிறுமிகளே உயிரிழந்துள்ளனர்.

படுகாயமடைந்த கர்ப்பிணிப் பெண் பாணந்துறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# கிராண்ட்பாஸில் 73, வெள்ளவத்தையில் 19 கொரோனா தொற்றாளர்

கொழும்பு,டிசெ.06

கொழும்பில் நேற்றுமுன் தினம் கிராண்ட்பாஸ் பகுதியில் அதிகளவு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

கிராண்ட்பாஸ் பகுதியில் 82 நோயாளர்களும், வெலிக்கடையில் 73 பேரும், தெமட்டகொடையில் 38 பேரும், மருதானையில் 38 நோயாளிகளும், வெள்ளவத்தையில் 19 பேரும் இவ்வாறு அடையாளம் காணப்பட்டனர்.

இதேவேளை கொழும்பில் நேற்றுமுன்தினம் மட்டும் 342 கொரோனா வைரஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர். (எ)

# சிறைச்சாலைகளில் பி.சி.ஆர். பரிசோதனை அதிகரிக்கப்படும்

கொழும்பு,டிசெ.06

சகல சிறைச்சாலைகளிலும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தலைமையில் நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற கூட்டத்தில் இது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

சிறு குற்றங்களுக்காக சிறைவாசம் அனுபவிக்கும் கைதிகளில் விடுதலை செய்யப்படக் கூடிய கைதிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டு தனிமைப்படுத்தலின் பின்னர் அவர்களை சமூகப் படுத்த வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, சிறைச்சாலைகளிலுள்ள கொரோனா தொற்றாளர்கள் அனைவரையும் ஒரு சிறைச்சாலைக்கு மாற்றி சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு இராஜாங்க அமைச்சர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (எ)

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகள் கட்டாயம் தண்டிக்கப்படவேண்டும்

## சம்பிக்க போர்க்கொடி

கொழும்புஇடிசெ.06

உயிர்த்த ஞாயிறுதினத்தன்று குண்டுத்தாக்குதலை திட்டமிட்டதும், அதனை நடைமுறைப்படுத்தியதும் சஹ்ரானும் அவரது குழுவும் மட்டுமே என நம்பிக்கொண்டிருக்க நாம் முட்டாள்கள் அல்ல. இந்தத் தாக்குதலின் சூத்திரதாரிகள் யார்? இவர்களை இயக்கியது யார்? இவர்களுக்கும் புலனாய்வுத்துறைக்கும் உள்ள சம்பந்தம் என்ன? இந்தியாவுடன் இவர்களின் தொடர்பு என்ன? என்பதெல்லாம் கண்டறியப்பட வேண்டும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வரவு-செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதியொதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். (அ-எ)




# மகேந்திரனை நாடு கடத்தும் கோரிக்கை நிலுவையிலேயே

## சிங்கப்பூர் நீதி அமைச்சருக்கு சட்டமா அதிபர் விளக்கம்

கொழும்பு,டிசெ.06

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரத்துடன் தொடர்புடைய மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன மகேந்திரனை நாடு கடத்தும் கோரிக்கை நிலுவையில் உள்ளது என சட்டமா அதிபர் சிங்கப்பூர் நீதி அமைச்சின் செயலாளருக்கு தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவால் இந்த தெளிவுபடுத்தல் அறிக்கை நேற்று முன்தினம் சிங்கப்பூர் நீதி அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டது என சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி அரச சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, பிணை முறிமோசடி விவகாரத்துடன் தொடர்புடைய அர்ஜூன மகேந்திரன் மீதான ஒப்படைப்பு கோரிக்கை தொடர்ந்தும் நிலுவையில் உள்ளது என சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

மேலும், அர்ஜூன மகேந்திரனை நாட்டுக்கு அழைத்து வருவது தொடர்பிலான அறிக்கையை தம்மிடம் நீதி அமைச்சர் அலி சப்ரி கோரியுள்ளார் என சட்டமா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.



முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜூன மகேந்திரனைக் கைது செய்ய உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கமைய அவரை ஒப்படைக்குமாறு சிங்கப்பூர் நீதி அமைச்சுக்கு சட்டமா அதிபர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கமைய தேவையான தகவல்கள் மற்றும் ஆவணங்கள் கிடைக்கப்பெற்றவுடன் இந்தக் கோரிக்கையை அரசு பரிசீலிக்குமென சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சு முன்னர் அறிவித்திருந்தது. (எ)

# யாழ். போதனா வைத்தியசாலை விடுதிக்குள் புகுந்தது வெள்ளம்!





**யாழ்ப்பாணம், டிசெ.06**

**உரிய வடிகாலமைப்பு வசதியின்மையால் யாழ்.போதனா வைத்தியசாலையின் சில விடுதிக் கட்டடப் பகுதிகள் நீரில் மூழ்கின.**

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கைகளை எடுத்து எதிர்காலத்திலாவது இவ்வாறான அனர்த்தம் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும் என யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதேவேளை சில வைத்திய சேவைகள் தற்காலிகமாக இடமாற்றப்பட்டு சிரமத்தின் மத்தியில் சேவைகள் வழங்கப்படுகின்றன- என்றார். (எ)



## கடற்படையினர் மத்தியில் மீண்டும் பரவும் கொரோனா!

கொழும்பு, டிசெ. 06

பூஸா தனிமைப்படுத்தல் நிலையத்தில், தனிமைப்படுத்தப்பட்டிருந்த 5 கடற்படையினருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருந்த கடற் படை வீரரோடு நெருங்கியத் தொடர்பிலிருந்த 85 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளிலேயே ஐவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# கொரோனா வைரஸ் தடுப்பூசி பெப்ரவரியில் இலங்கைக்கும்!

கொழும்பு, டிசெ.06

உலக சுகாதார அமைப்பினால் அங்கீகாரமளிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தடுப்பூசி பெப்ர வரி நடுப்பகுதியில் இலங்கைக்கு கிடைக்கலாம் என மருந்தகங்களை ஒழுங்குபடுத்துதல், உற்பத்தி விநியோகம் தொடர்பான இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜெயசுமன தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரு வதற்கு முன்னெடுக்கப் படும் நடவடிக்கைகள் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்:-

சுகாதார அதிகாரிகள் கொரோனா வைரஸ் மருந்து தொடர்பில் இரு குழுக்களை அமைத்துள்ளனர்.

அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் கொரோனா வைரஸ் மருந்து தொடர்பில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பாக அவதானிக்கப்பட்டு வருகின்றன.



அந்தவகையில்,கொரோனா வைரஸ் தடுப்பூசியை எந்த நாட்டிடமிருந்து பெறுவது என்பது குறித்து நாங்கள் திறந்த மனதுடன் இருக்கின்றோம்-என்றார்.

# பாதுகாப்பைச் சீர்குலைத்து மக்களை கொன்ற நல்லாட்சி!

## அமைச்சர் ஜோன்ஸ்டன் காட்டம்



கொழும்பு, டிசெ.06

தேசிய பாதுகாப்பை வலுவிழக்கச் செய்து நல்லாட்சி என்று கூறிய கடந்த அரசு நாட்டு மக்களைக் கொலை செய்தது என நெடுஞ்சாலைகள் அமைச்சர் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்காகவே மக்கள் இந்த அரசுக்கு ஆணை வழங்கியுள்ளனர். அதனை நோக்காகக் கொண்டே நாட்டின் 69 இலட்சம் மக்கள் எமக்கு வாக்களித்தனர். அந்த வகையில் துமிந்த சில்வா விடுதலை செய்யப்படவேண்டும்.

அதேபோன்று உயிர்த்த ஞாயிறுதினத்தன்று இலங்கையில் இடம்பெற்ற தொடர் குண்டுத்தாக்குதல்களின்போது பாதிப்புக்குள்ளானவர்களுக்கு நீதியைப் பெற்றுத்தருமாறு பேராயர் கண்ணீருடன் காத்துக்கொண்டிருக்கின்றார். பேராயர் எம்மிடம் நீதியைப் பெற்றுத்தருமாறு கூறினார். கொலைகாரர்களுக்கும், அவர்களுக்கு உதவி புரிந்தவர்களுக்கும், அதற்கான நிதியை வழங்கியவர்களுக்கும் தண்டனையைப் பெற்றுக்கொடுக்குமாறே அவர் அப்போதும் இப்பொழுதும் எம்மிடம் கேட்டுக்கொண்டிருக்கின்றார்.

இந்நிலையில் அவரை மையப்படுத்தி எதிர்த்தரப்பினர் அரசியல் பேசுவதை நிறுத்திக்கொள்ளவேண்டும். முன்னரும் பேராயரை மையமாகக் கொண்டு அரசியல் இலாபம் தேடும் நடவடிக்கையையே எதிர்த்தரப்பினர் முன்னெடுத்திருந்தனர். கடந்த அரசாங்கம் தேசிய பாதுகாப்பை செயலிழக்கச் செய்து நாட்டு மக்களை திட்டமிட்டு கொலை செய்துள் ளது- என்றார். (அ-எ)

கல்வி tv
CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 கற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.30 மணி - சைவசமயம்

# வேணாவில் கிராம மக்கள் காணி கோரிப் போராட்டம்



முல்லைத்தீவு, டிசெ.06

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வேணாவில் கிராமத்தில் காணி கோரி வீதிக்கு வந்த மக்கள் கொட்டில்கள் அமைத்துப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வேணாவில் கிராமத்தில் சுமார் 40 குடும்பங்கள் வரை வாழ்விடக் காணிகள் இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர்.

குறிப்பாக தமக்கான காணி களை வழங்குமாறு கோரி புதுக்குடியிருப்பு பிரதேச காணிக்கிளை பிரதேச செயலர் உள்ளிட்ட பலரிடம் அவர்கள் கோரிக்கைகளை முன்வைத்தும் எந்த விதமான தீர்வுகளும் கிடைக்கவில்லை என்றும்-

இதனால் தமது கிராமத்தில் உள்ள அரச காணி ஒன்றில் வீதியோரத்தில் கொட்டில்களை அமைத்து காணி கோரிப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# இருபாலையில் மக்கள் வெள்ளத்தால் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ 06

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இரு பாலை கிழக்கு மற்றும் இருபாலை தெற்கு பகுதிகளான ஜே 257, ஜே 258 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் பல மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக இருபலை தெற்குப் பகுதியில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 26 நபர்கள் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு இருபாலை கிழக்குப் பகுதியில் 72 குடும்பங்களைச் சேர்ந்த 252 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்தப் பகுதியில் ஒரு வீடு முழுமையாக சேதமாகியுள்ள அதேவேளை பல வீடுகள் பகுதியளவில் சேதமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு
Eelanadu

# யாழில் 57ஆயிரத்து 513 பேர் மழை வெள்ளத்தால் பாதிப்பு



## அரச அதிபர் மகேசன் தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.06

**புரெவிப் புயல், மழை வெள்ளத்தால் யாழ். மாவட்டத்தில் 17 ஆயிரத்து 243 குடும்பங்களைச் சேர்ந்த 57 ஆயிரத்து 513 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.**

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடும் மழை - வெள்ளத்தால் பலர் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப் பட்டுள்ளனர். இவ்வாறு தங்க வைக்கப் பட்ட மக்களுக்கு சமைத்த உணவு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவற்றை விட கூரை விரிப்புக்கள், நில விரிப்புக்கள் மற்றும் ஏனைய உணவுப் பொருள்களை வழங்க பிரதேச செயலாளர்களால் நட வடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் சிறு தொழில் முயற்சியில் ஈடுபட்டு வந்த 574 தொழில் முயற்சிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க துரித நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம். அத்துடன் தொண்டு நிறுவனங்கள், செஞ்சிலுவைச் சங்கம், சுகாதாரத்துறையினர் ஆகியோரும் இவர்களுக்கான உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் அனர்த்தத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கான உதவிகளை வழங்க அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளரால் சுமார் 10 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது- என்றார். (எ-03)

# புதிய பாடசாலைகளுக்கு 10 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவேண்டும்

கொழும்பு,டிசெ.06

இந்த வருடம் வெளியான 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட்ட ரீதியாக வழங்கப்பட்ட வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாண வர்களை 2021 ஆம் ஆண்டு ஆறாம் தரத்துக்கு இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கமைய விண்ணப்பங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்குள் அனுப்பி வைக்குமாறு அறிக்கை ஒன்றை விடுத்து கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

விண்ணப்பங்களையும் ஆலோசனைப் பத்திரங்களையும் பாடசாலைகளின் அதிபர்களிடமிருந்து பெற்றோர்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப் பப்படிவங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றிய பாடசாலைகளின் அதிபரிடம் கையளிக்க வேண்டும்.

கொரோனா பரவல் நிலைமையைக் கருத்தில் கொண்டு நாட்டில் மூடப்பட்டுள்ள பாடசாலைகளுக்கான விண்ணப்பங்களை தத்தமது பாடசாலைகளுக்கே பெற்றுக் கொள்ள சுகாதார வழிகாட்டல்களை முறையாகப் பின்பற்றி வலய கல்வி அதிகாரிகள் மற்றும் பாடசாலைகளின் அதிபர்களை நாடுமாறும் கல்வி அமைச்சு அறிவுறுத்தி யுள்ளது. (எ)

# விளையாட்டுத்துறைக்குள் அரசியல் தலையீடில்லை



## அமைச்சர் நாமல் கூறுகிறார்

கொழும்பு,டிசெ.06

தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சியில் விளையாட்டுத் துறைக்குள் எந்தவித அரசியல் தலையீடும் இல்லை என விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

விளையாட்டு அமைப்புக்களின் நிதியொதுக்கீட்டில் வெளிப்படைத்தன்மையை அரசாங்கம் நிச்சயம் உறுதிப்படுத்தும்.

அதேவேளை இலங்கை கிரிக்கெட் சபை உள்ளிட்ட விளையாட்டு அமைப்புக்கள் அரசியல் தலையீடு இல்லாமல் செயல்படும்.

விளையாட்டு தொடர்பான புதிய சட்டம் தேவை. புதிய விளையாட்டுச் சட்டத்தை உருவாக்கும் செயன்முறை தற்போது இடம்பெற்று வருகிறது.

அத்தோடு லங்கா பிரிமியர் லீக் போட்டித் தொடருக்கு விளையாட்டு அமைச்சால் எந்தவொரு நிதியும் ஒதுக்கப் படவில்லை. இலங்கை கிரிக்கெட் சபையால் இதுதொடர்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன- என்றார். (எ)

# கொரோனாவைக் கட்டுப்படுத்த ஆயுர் வேதத்துக்கு சக்தி உண்டு

கொழும்பு,டிசெ.06

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத் தக் கூடிய சக்தி ஆயுர் வேதத்துக்கு உண்டு என அரசாங்க ஆயுர் வேத மருத்துவ அதிகாரிகள் சங்கத் தலைவர் பி.ஹேவாக மகே தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை களை முன்னெடுப்பதே சிறந்த செயல்பாடாகும் எனவும் அவர் தெரிவித் தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித் தவை வருமாறு:

2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பரவ ஆரம்பித்த கொரோனா வைரஸ் தொற்றை இலங் கையில் ஆயுர் வேத மற்றும் தேசிய மருத்துவர்கள் சங்கம் ஆகியன ஒன்றிணைந்து மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைக ளுக்கு மத்தியில் மிக விரைவாக கட்டுப்படுத்த முடியுமாக இருந்தது.

பிரதேச செயலகங்கள் மூலம் ஆயுர் வேத மருத்து வத் துறையினருடன் இணைந்து சமூக சுகா தார அலுவலர்கள் மூலம் 18 இலட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு தேவையான ஆயுர்வேத மருந்துகளை வழங்கியதன் மூலம், எம்மால், முதலாவது கொரோனா முதலாம் அலையைக் கட்டுப் படுத்த முடியுமாக இருந்தது.

இருப்பினும்இரண்டாவது அலை ஏற்பட்டபோது சுதேச மருத்துவ சேவைகளிலிருந்து ஒரு தேசிய ரீதியான செயல் திட்டத்தை முன்னெடுக்க அரசாங்கத்திடம் நாம் கோரிக்கை ஒன்றை முன்வைத்தோம்.

இது தொடர்பில் எமக்கு எவ்வித முடிவுகளும் கிடைக்கப்பெறவில்லை. எனவே நாம் மீண்டும் இன்று அந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றோம். நிச்சயமாக கொரோனாவைக் கட்டுப்படுத்தக் கூடிய சக்தி ஆயுர் வேதத்துக்கு உண்டு.

நாட்டின் தற்போதைய நிலைமையை பார்த்தால், உண்மையில், நாளுக்கு நாள் இந்த வைரஸ் பரவலானது, மிக அபாயகரமான முறையில் பரவிக்கொண்டிருக்கிறது.

மரணங்களும் தொடர்ச்சியாக நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன.

எனவே இதுதொடர்பில் மேலும் தாமதிக்க முடியாது. உடனடியாக தொற்றைக் கட்டுப்படுத்தக் கூடிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதே ஒரு சிறந்த செயல்பாடாக இருக்கும்- என்றார். (எ)

வாடகைக்கு இடம் தேவை
யாழ். நகரை அண்மித்த பகுதியில் (5 km இற்குள்) சிறிய நிறுவனம் ஒன்றிற்கு முற்பணமில்லாமல் வாடகைக்கு இடம் தேவை.
தொடர்புகளுக்கு:
076 300 5506




அருந்ததி
இணைய திருமண சேவை

மணமகன் விபரம்

16667| வே |1981
Divorced | வட்டுக்கோட்டை| இந்து | Staff |செவ் 12 |Sri lanka

16541| வே|1982
சண்டிலிப்பாய் | இந்து
Practice Manager | Australia
கார்த்திகை(ரிஷபம்)|173செ.மீ

16907 | வே |1983
Divorced |கரவெட்டி | இந்து
It Technician | Canada |
செவ் 04|விசாகம்(விருச்சிகம்) |185செ.மீ

16910 | வே |1984
நெல்லியடி| இந்து
Software Engineer |
Sri Lanka |
செவ் 07|கேட்டை(விருச்சிகம்)

17006 | வி |1984
சங்கானை| இந்து
Electronic Engineer | Uk
திருவோணம் (மகரம்)|செவ் 02 |178செ.மீ

மணமகள் விபரம்

16601| வே |1985
Divorced | இணுவில்| இந்து
Dentist | Sri lanka |சூ.செவ் 08
திருவோணம்(மகரம்)|153செ.மீ

17045 | ந |1987
யாழ் நகரம்| இந்து
Management Assistant | Sri lanka |மகம்(சிம்மம்) |155செ.மீ

16697| கோ |1987
நெல்லியடி| இந்து
Development Officer
|சூ.செவ் 01 | Sri lanka |
பரணி(மேடம்)|154செ.மீ

16273 | ப |1987
|திருநெல்வேலி
|இந்து|Development Officer |
Sri lanka |சூ.செவ் 04
ரோகினி(ரிஷபம்)|152செ.மீ

16838 | ப |1988
யாழ் நகரம் | இந்து
Graduate Teacher | Sri lanka
பூராடம்(தனுசு)|165செ.மீ

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
திரு. யோன்சன் ராஜ்குமார்
ஆசிரிய ஆலாசகர் யாழ் கல்வி வலயம்



7.20 மணி : நாளும் நல்லவை
வழங்குபவர் திரு. ந. சத்தியபாலன்
எழுத்தாளர், ஓய்வுபெற்ற ஆசிரியர்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : ரசிகன் என்கிற தலைவன்



**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : வீக் என்ட் மூவி - வின்னர்
ஹொலிவுட் திரைப்படங்கள்
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : கலாய்க்கலாம் வாங்க (நேரலை)
6.00 மணி : ஹலோ கோடம்பாக்கம்



**இரவு**

7.00 மணி : ஸ்பொட் லைட்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சொல்லாடுகளம்



10.00 மணி : பதிவு

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : டொப் 20
11.00 மணி : ரிவைன்ட் ராகங்கள்

**பகல்**

12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே
(நேரலை)
3.00 மணி : எங்கேயும் எப்போதும்
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**

7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : அண்பிளக் சோ
10.00 மணி : பாடும் நிலா

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம்
(வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு)
மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.30 மணி - சைவசமயம்

## ஓம் ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : விநாயகர் புராணம்
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் தெல்லிப்பழை
துர்க்காதேவி தேவஸ்தானம் திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் நவாலி அட்டகிரி
கந்தசுவாமி கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : விநாயகர் புராணம்
08.00 மணி : யாழ்ப்பாணம் தெல்லிப்பழை
துர்க்காதேவி தேவஸ்தானம் திருவிழா

## CHANNEL HOLY MARY

**காலை**

8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை
11.30 மணி : திருவருகைக்கால சிந்தனை

**பகல்**

12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.00 மணி : நிதர்சனம்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி
5.30 மணி : பாடல்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**

12.00 மணி : ஷுகர் அதான்
12.30 மணி : அன்னிலா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.12.2020 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.